தென்றல்

ஆசிரியர்:- கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 3 | சென்னை | 10—11—56 | சனிக்கிழமை | இதழ் 11

—வெள்ளி நிலவடிக்க, வீதியிலே நான் படுக்கத்—

இராமனுதபுர மாவட்டம் - ஏழாயிரம் பண்ணையைச்சேர்ந்த பிச்சை என்ற மாணவர் கிராமியத்துக் காதற் பாட்டுகளை இங்கே சுவைபட விமர்சனம் செய்திருக்கிறார். படிக்கப் படிக்க இன்பந்தரும் நாடோடி இலக்கியத்தை நண்பர் எடுத்தாளும் விதமே நயமிகுந்ததாக இருக்கிறது.

எழுத்தறிவில்லாத தமிழ்ப் பெண்கள்கூட இலக்கண வரம்பிற்குக் கட்டுப்பட்டுப் பாட்டிசைத்திருப்பது தமிழகத்திற்கே அமைந்த தனித்தன்மைகளில் ஒன்றெனப் புலனாகிறது.

நீங்கள்கூட என் கலியாணத்திற்கு வந்திருப்பீர்கள். ஒருவேளை நீங்கள் வந்திருக்காவிட்டாலும், என் கலியாணத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். சுற்றியுள்ள பதினெட்டுப் பட்டிதொட்டி எல்லாம் இன்னும் பாராட்டுகின்றன. இன்றைக்கும் பல்லுப் போனவர்கள்கூடச் சொல்லுவார்கள், "இப்படி விமரிசையாய் நடந்த கலியாணத்தை இதுவரை நாங்கள் பார்த்ததே இல்லை"-என்று. என் கலியாணம் 'ஏகத் தடபுடலாக' நடந்தது. அந்தக் கலியாணத்துக்கு, நானூறு பாப்பாங் கூடி நாள் குறிச்சானும். முன்னூறு பாப்பாங் கூடி முகூர்த்தம் வைச்சானும்! வச்சு என்ன செய்ய? எனக்கு வகையான வாழ்விருக்கா? இல்லேண்ணு மச்சானுக்கு நல்ல புத்திதான் இருக்கா?

அவர் என்னைத் தாலி கட்டினார்; ஆனால் தாரமாக்கவில்லை. சோறுந் துணியும் பெண்ணுக்குச் சுகந்தந்து விடுமா? அதுவா பெண்ணுக்குச் சொர்க்கம்? இது தெரியாதா இவருக்கு? அது சரியே - இப்படிப் பட்டவருக்கு எதுக்குக் கலியாணம்? வயசுப்பெண்ணைக் கொண்டுவந்து இப்படி வருந்தச் செய்யலாமா?

மாட்டார். நான் போய் முதலில் எப்படிப் பேசுவது?-என்று எண்ணி நானும் பேசாது இருந்துவிட்டேன். கண்ணைமூடி நால்லாத் தூங்கிவிடுவோம் என்று நினைச்சா, கண்ணை மூடத்தான் முடியுமா? தூக்கந்தான் வருமா?

அரைச்ச மஞ்சள் அம்மியிலே
அவரும் நானுந் திண்ணையிலே
குளிச்ச மஞ்சள் கன்னத்திலே
கூடுவது எக்காலம்?

—இதை மனசுக்குள்ளே சொன்னேன். ஆனால் அவர் காதில் விழும்படி சொல்லவில்லை; சொல்ல முடியவில்லை. சொன்னாலும் பலன் இருப்பதாகத் தெரியவில்லை!

பால்போல் நிலவடிக்கும்; "பகற் கனவு" பல கொடுக்கும். கணவனுக்கும் மனைவிக்கும் இப்போதெப்படி இருக்கும்! ஆனால் நாங்கள் எப்படி இருக்கிறோம்? அவர் என்னருகில் வந்தாரா? என்னமாவது சொன்னாரா? சோத்துப் பிண்டம்போலச் சும்மா கிடக்குறாரே? பார்த்துப் பார்த்து நான் ஏங்குகிறேனே! காத்துக் காத்துக் கிடக்கிறேனே? கண்டது என்ன?

ஒருவேளை, தூங்குபவர்க்குத் தொந்தரவு தரக்கூடாது என நினைத்தாரா? ஆனாலும் நான் தூங்கவில்லையே! அவர் - பைய எழுந்தார்; பாயைச் சுருட்டினார்; கையில் எடுத்தார்; வீட்டுக்குள்ளே போனார். "உள்ளே வாயேன்" இதைச் சொல்லுவார் என எதிர்பார்த்தேன். ஆனால் அவர் சொல்லவில்லை; சொல்லிக் கூப்பிடவில்லை. சொல்லிக் கூப்பிடாவிட்டால் என்ன? நமக்கு உரிமை இல்லையா என்ன? பேதை என் மனசு இதைப் பேசியது. எனவே, நானும் பைய எழுந்து, பாயைச் சுருட்டிக் கையில் எடுத்தேன். வீட்டுக்குள்ளே போகக் கதவருகே வந்துவிட்டேன். ஆனால், அய்யய்யோ!-கதவைத் தாழ்ப்பாள் போட்டு விட்டாரே? எப்படி இருக்கும் எனக்கு? இதற்கு நான் வாய்விட்டு அழுவதா? வயிற்றில் அடித்து அழுவதா? முட்டி மோதி அழுவதா? ஓங்கார ஒப்பாரி வைப்பதா?- இதையெல்லாம் செய்யவில்லை. ஆனால் ஒன்று மட்டுந்தான் செய்தேன், அதையும் பரிபூரணமாகச் செய்தேன். அதாவது கண்ணீரை மட்டும் ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடச் செய்தேன். ஆனால், எனக்கு ஆற்றுவார் யார் இருக்கார்?...நான் வீட்டுக்கு வெளியே; அவர் வீட்டுக்கு உள்ளே; இதுதான் எங்கள் 'கணவன் மனைவி' உறவு!

வெள்ளி நிலவடிக்க
வீதியிலே நான் படுக்க
தள்ளிக் கதவடைக்கச்
சம்மதமோ உங்களுக்கு!

—அய்யோ ஆத்தே, உன் மகள் வாழ்வு இப்படியா போகவேண்டும்?

என்னை வேண்டாம் என வெறுத்தொதுக்குகிறார். அதற்கும் காரணம் இருக்கிறது. ஆமாம்; 'வைப்பாட்டி' ஒன்று வைத்திருக்கிறாராம். கிணத்தாங்கரைப் 'பெண்கள் மாநாட்டி'லிருந்து இதைத் தெரிந்துகொண்டேன். முந்தா நாள்கூட அவளைக் கண்டேன். அவளும் என்னைக் கண்டாள். கண்டதும் "கள்ளப் பயல்" போல் திரு திருவென்று விழித்தாள். என்னை அறியாமலே, "குட்டிச்சாத்தானே! குடிகெடுக்க வந்தவளே! சக்களத்தி! உனக்கு ஒரு சாவு வல்லையா?"-இதையெல்லாம் உதடுகள் முணு முணுத்தன. ஆனால் வார்த்தைகள் வெளி வரவில்லை.

'அவள்', "இளம் விதவையாம்" அவள் சாதிக்கட்டுப்பாட்டின்படி மறுமணம் கூடாதாம். எனவேதான் இவ்வளவு "ஒழுங்காய்" வாழுகிறாளாம். இதுதான் என் 'சக்களத்தி'யின் சரித்திரச் சுருக்கமாம்.

ஏ, சமுதாயமே! இந்தக் கேடு உன் கண்ணில் படவில்லையா? அல்லது இதைப் பார்க்க உனக்குக் கண்ணில்லையா? அவளை மறுமணம் செய்யும்படி விட்டுவிட்டால், 'ஏறக்குறைய' அவளும் ஒழுங்காக வாழ்வாளே? பிறகு என்போன்றவர்கள் இருக்கமாட்டார்களே! ஏங்கி அழமாட்டார்களே!- இப்படிக்கூடச் சில சமயங்களில் வாயில் வந்தபடியெல்லாம் வைது திட்டுவேன். "திட்டத் திட்டத் திண்டுக்கல்லு-வைய வைய வைரக் கல்லு"-அதுபோல எந்தப் பலனும் எனக்கில்லை.

என் கணவர் என்னிடம் என்ன குறை கண்டாரோ! எனக்கே தெரியாது. ஒருவேளை நான் அழகாக இல்லையா? இதை ஒருவன் கூட ஒத்துக்கொள்ளமாட்டானே! எப்படி ஒத்துக்கொள்ளமுடியும்! "அரேபியாக் குதிரைபோல அங்க அமைப்பு; அழகு நடை; சித்திர உருவம்; எத்திக்கில் தேடினாலும் இவள்போல அழகிலே இன்னொருத்தி இருப்பாளோ! இவளுக்கு ஈடு ஏது, இந்த உலகத்திலே"- என்று பிறர் என்னைச் சொல்லக் கூடும். சொல்வது உயர்வு நவிற்சி அல்ல; உண்மையும் இதுதான்.

ஆனால் என்னிடம் அவர் அணுகுவதே இல்லை. பெண்ணுக்கோ, தாலி கட்டியவன்தான் கணவனும்; ஆணுக்கோ மனசுக்குப் பிடிச்சவள் தான் மனைவியாம். ஆமாம் - அவர் வைப்பாட்டி இருக்கிறாளே, "ஆடையும் அணியவேண்டும்; அங்கமும் தெரியவேண்டும்" என்பதுதான் அவள் எண்ணம் போலும். பொதுவாக நாங்களெல்லாம் அங்கங்களை மறைக்க ஆடை அணிகிறோம். ஆனால் அவளோ, அங்கங்களை வெளியே "காட்ட" ஆடை அணிகிறாள். அவளை - 'அழகானவள்' என்று சொல்லமுடியாது. ஆனாலும் 'அழகில்லாதவள்' என்றும் சொல்லக்கூடாது. இருந்தாலும் என் அழகில் பாதிகூட இருக்க மாட்டாள்; என்னால் இதைச் சொல்லமுடியும். ஆனாலும் என் கணவர், அவள் "முந்தச் சேலையைப் பிடித்து, எப்போதுமே வலம் வருகிறாரே! - ஏன்?" இதற்குப் பதில் எனக்குத் தெரியாது. ஒருவேளை,

சூலஞ் சருகரிச்சு
ஆக்காட்டிப் பித்தெடுத்துக்
கோழிக் குடலெடுத்துக்
கூட்டினாளோ கைமருந்து?

—'மாய மந்திரங்கள்' போட்டு மயக்கினாளோ? மருந்து வைச்சு மயக்கினாளோ? 'மாயப்பொடி' போட்டு மயக்கினாளோ? என்னவோ! எனக்கென்ன தெரியும்?— ஏன் இந்தக் 'கழிசடையைச்' சுற்றி வட்டம் போடுகிறார்?

பேசுங் கிளி இருக்கப்
பே நாயைத் தேடலாமா?

பாடுங் குயி லிருக்கப்
பனங்காடைத் தேடலாமா?

முந்திரி மோதிரமே!
மூனுதுட்டுச் சந்தணமே!
சித்திரம் போல் நானிருக்கத்
தேச வழி போகலாமா?

தேச மெல்லாம் பொல்லாப்பு
திரிஞ்ச நாள் போதாதா?
பாச மெல்லாம் உங்கமேலே!
பரிதவிக்கேன் உங்களாலே!

சோறுகறி செல்லாமல்
சுக்கா உணருதனே
வங்சிக் கொடி எஞ்சாமி
வந்தணைத் தால் சோறுசெல்லும்.

—'புணரு வண்டு' தெரியுமா உங்களுக்கு? பொன்வண்டு வகையைச் சேர்ந்த வண்டு இது. புத்தி கொஞ்சமும் இல்லாத வண்டு இது. "எரிக்கலம் பூவே எனக்குச் சொர்க்கம்" - என்று சொல்லும் அந்தப் புத்தியில்லாத புணரு வண்டு. அந்தப் புணருவண்டின் புத்திதான் என் புருஷனின் தலையில் ஏறி இருக்கிறது. ஒருவேளை என் புருஷனும் புணரு வண்டும் 'ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளோ? என் புருஷனும் வண்டும் "கூடப்பிறந்த அண்ணன் தம்பி போலும்!" இல்லாவிட்டால், ஏன் 'இப்படி எருக்கலம்பூவை நாடிச் செல்லுகிறார்கள், இந்த இரண்டு பேரும்!

பூவாசந் தெரியாத
புணரு வண்டே-என்
புருஷங் கூடப் பிறந்த
'கழுதை வண்டே'

–'எரிக்கலம் பூவிலிருக்கும்' அவரை எப்படித்தான் என் பக்கம் திருப்பப் போகிறேனோ? இன்பவாழ்வு வாழப்போகிறேனோ? எனக்கே தெரியவில்லை. ஆனாலும், "அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" இப்படி ஒரு மனசு வக்காலத்து வாங்கி வாதிக்கிறது. "பாறையில் முட்டினால் பலன் என்ன? மண்டைதான் உடையும்"-இப்படி இரண்டாவது மனசு எதிர்வாதம் பண்ணுகிறது. இதில் எது சரியோ?

—தள்ளிக் கதவடைக்கச் சம்மதமோ உங்களுக்கு!—

★ ★ ★ ★

மேலே உள்ளது, ஒரு வாழ்விழந்த பெண்ணின் கண்ணீர்த் துளிகள்! பாவம்! பரிதாபப் படுகிறோம் அவள் நிலை கண்டு!

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். ஒழுக்கங்கெட்ட தன் கணவனைத் திருத்துவாள். அதில் தோல்வி கண்டால், ஒழுக்கங்கெட்ட வாழ்வில் தன்னைச் செலுத்துவாள். ஏனென்றால், கண்ணகி காலம் அல்ல இது!

"இளம் விதவை" - இவளால் ஒரு குடும்பம் சீர்குலைந்தது.

"ஏமாந்த மனைவி" - இவளால் சீர்குலையப் போகும் குடும்பங்கள் எத்தனையோ?

இத்தனை சீர்கேட்டுக்கும் காரணம் என்ன? "விதவை மறுமணம் கூடாதாம்" - இதைச் சமுதாயம் சொல்லுகிறதாம்.

விதவை மறுமண மறுப்பால் இத்தனை ஒழுக்கங்கெட்டவர்கள் பெருகுகிறார்களே - இதற்குச் சமுதாயம் என்ன சொல்லுகிறதாம்? ★

ஊருக்கு உபதேசம்

வழக்கமாய் இரவு எட்டரை மணிக்குள் ஜோலார்பேட்டை வந்து சேரும் பெங்களூர் பாசஞ்சர், அன்று அரைமணி நேரம் தாமதமாக வந்தது. எப்போதுமே இந்த வண்டியில் கூட்டமதிகம். ஆடிக் கிருத்திகைக்காகத் திருத்தணி செல்வோரின் கூட்டம் வேறு. நிற்கவாவது எந்தப் பெட்டியிலேனும் இடம் கிடைக்காதா என்று பெட்டிக்குப் பெட்டி தாவுவதும் அங்கிருந்து நெட்டித் தள்ளப்படுவதுமாக, நீண்ட உயிர்ப் போராட்டத்திற்குப் பிறகு எப்படியோ ஒரு பெட்டியிலேறி, நிற்க இடம் பிடித்துவிட்டேன்.

வண்டி புறப்பட்டது. பெருமூச்சு விட்டுவிட்டு, சுற்றுமுற்றும் பார்த்தேன், எனக்குத் தெரிந்த யாராவது இருக்கிறார்களா என்று. என்னுடைய ஆராய்ச்சி வீண் போகவில்லை. தேச விடுதலைக்காகப் போராடிச் சிறை சென்ற தியாகிகள் பட்டியலில் இடம் பெற்றிருந்த உயர்திருவாளர் நரசிம்ம ஐயங்கார் உட்கார்ந்திருப்பதைக் கண்டேன். அவரும் என்னைப் பார்த்தார். “இப்படி எங்கே...சென்னைக்குப் போகிறாயா தம்பி?” என்று கேட்டார். இல்லிங்க. இராணிப்பேட்டை வரையில் போகிறேன். என் நண்பன் ஒருவனுக்குத் திருமணம்..நீங்கள்?” என்றேன். தாம் சென்னை செல்வதாகக் கூறினார்.

ஐயங்காரின் சொந்த ஊர் சேலம். சேலத்தில் என் அத்தை வீடு. உயர்நிலைப் பள்ளிப் படிப்பை நான் சேலத்திலேயே முடித்தேன். அப்போதுதான் ஐயங்கார் எனக்குப் பழக்கமானார்.

பள்ளியில் அப்போது நான் மாணவர் கழகச் செயலாளனாக இருந்தேன். சுதந்திர தின விழாவை முன்னிட்டு மாணவர் கழகத்தில் பேச, ஐயங்காரை அழைத்திருந்தேன். மறுக்காமல் என் அழைப்பை ஏற்றுக் கொண்டு பேச வந்தார்.

செந்நீரைத் தண்ணீராகத் தாயகத்து மண்ணிலே சிந்தி, நாட்டின் விடுதலைக்காக உயிர் நீத்த தியாகச் சியங்களின் வரலாற்றை அவர் உருக்கமாகச் சொன்னபோது, எல்லோருமே உணர்ச்சி வசப்பட்டுவிட்டோம். திருப்பூர் குமரனும், தில்லையாடி வள்ளியம்மையும், பகவத் சிங்கும் எங்கள் மனக் கண்முன் மாறி மாறித் தோன்றினர்.

கடைசியாக ஐயங்கார் தமது சொந்த வாழ்வைப் பற்றியும் தெரிவித்தார்.

“ஐதீகத்திலேயே ஊறிப் போன குடும்பம் எங்களுடையது. அப்படியிருந்தும், சுதந்திர வேட்கை என்னைத் தேசியவாதியாக்கி விட்டது. பார்ப்பான் பறையன் என்ற பேதத்தை நான் மறந்து பலவருடங்களாகி விட்டன. ‘பார்ப்பானை ஐயர் என்ற காலமும் போச்சே, வெள்ளைப் பரங்கியரைத் துரை என்ற காலமும் போச்சே’ என்று பாடிய அமரகவி இப்போது இருந்தால், அவர் வாயில் சீனியைக் கொட்டுவேன்...சுயநலத்தின் காரணமாகத் தீண்டாமையை உருவாக்கிய துரோகிகள் இப்போதிருந்தால், எங்கள் வீட்டுத் தொழுவில் அவர்களைக் கட்டி, யாரை அவர்கள் தீண்டத் தகாதவர்கள் என்று கூறினார்களோ அந்தத் தீண்டத் தகாதவர்களின் கையிலேயே கசையைக் கொடுத்து முதுகுத் தோலை உரிக்கச் செய்திருப்பேன்!...நான் பெருமைக்காகச் சொல்வதாக நினைக்க வேண்டாம்—என் மகள் சேரியில் வாழும் ஒருவனை விரும்பி மணந்து கொள்வதாகக் கூறினால், மகிழ்ச்சியுடன் அதற்கு நான் சம்மதிப்பேன்!......”

மாணவர்களிடையேயும் ஆசிரியர்களிடையேயும் எழும்பிய பலத்த கைத்தட்டல் ஓய்வதற்கு வெகுநேரம் பிடித்தது. நன்றி கூறி ஐயங்காரை நான் வழியனுப்பினேன். அதன் பிறகு அவரை நான் அடிக்கடி சந்தித்தேன். கொள்கையளவில் எனக்கும் அவருக்கும் வேற்றுமை இருந்தபோதிலும், சமுதாய சீர்திருத்தத்தைப் பொறுத்தவரை நாங்களிருவரும் ஒரே நோக்கத்தைக் கொண்டவர்களாக இருந்தோம். பள்ளிப் படிப்பு முடிந்து நான் என் சொந்த ஊருக்கு வந்து விட்ட பின்பும், அத்தை வீட்டிற்குப் போகும்போதெல்லாம் சேலத்தில் ஐயங்காரைக் காணத் தவறியதில்லை.

நரசிம்ம அய்யங்கார்

★

எதிர் பாராத விதமாக இப்போது இரயிலில் அவரைச் சந்தித்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

“இரண்டு வருடங்களுக்கு மேலாகியிருக்கும் உங்களைப் பார்த்து......” என்று பேச்சைத் தொடர்ந்தேன். “ஆமாம் தம்பி! இப்போதெல்லாம் ஏன் நீ சேலத்திற்கு வருவதில்லை?” என்று கேட்டார். ஏதோ காரணம் சொல்லிவிட்டு, “பரிமளா சௌக்கியமா? கலியாணமாகி விட்டதா?” என்று கேட்டேன். அவர் முகம் சுருங்கிவிட்டது. சிறிதுநேரம் அவர் பேசாமலிருந்துவிட்டு ஒரு பெருமூச்சு விட்டார். நான் ஒன்றும் புரியாமல் திகைத்தேன்.

ஐயங்காரின் மகள் பரிமளாவும் நானும் உயர்நிலைப் பள்ளியில் ஒரே வகுப்பில் படித்தவர்கள். பள்ளித் தோழி என்ற முறையில் அவளைப்பற்றி அவள் தந்தையிடம் விசாரித்ததில் என்ன தவறு? பரந்த நோக்கங் கொண்ட தியாகி ஐயங்கார், மிகச் சாதாரணமான எனது கேள்வியை எப்படி தவறாகக் கொள்ள முடியும்?

“என்ன, ஒரு மாதிரியாக இருக்கிறீர்களே!” என்று வினவியவண்ணம் அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். சிறிது நேரத்திற்குப் பிறகு அவர் வாய் திறந்தார்: “பரிமளா...ஆம்... பரிமளா......”

அவர் குரலில் சோகம் நிறைந்திருந்தது. “என்ன பரிமளாவுக்கு?” என்று பதைப்புடன் கேட்டேன்.

“பரிமளா இறந்துவிட்டாள்!”

பரிமளா இறந்துவிட்டாளா? ஐயோ! அவளைப் பற்றி விசாரித்து ஐயங்காரின் மனதை வீணாகச் சஞ்சலத்திற்கு ஆளாக்கி விட்டோமே!

ஐயங்கார் தலை குனிந்திருந்தார். அவர் கண்கள் கலங்கியிருந்தன. கதராலான கைக்குட்டையால், வியர்த்த முகத்தையும் கலங்கிய கண்களையும் துடைத்துக் கொண்டார். எப்படி இறந்தாள் பரிமளா என்றறிய என் மனம் துடித்தது. மேலும் அவரை வேதனைக்காளாக்கக் கூடாதென்ற எண்ணத்தில் பேசாமலிருந்தேன். சோகத்திலேயே அவரை மூழ்க விடாமல் பேச்சை மாற்றினேன்.

“நீங்கள் ஜோலார்பேட்டையில் தானே இரயிலேறினீர்கள்?”

“இல்லை தம்பி! நான் கோலாரிலிருந்து வருகிறேன்.”

“அப்படியா?”

“ஆமாம்” என்று தலையசைத்தார். கோலாரில் யாரிருக்கிறார்களோ? ஒருவேளை, அங்கேதான் பரிமளாவைத் திருமணம் செய்து கொடுத்திருந்தாரோ!.... சேச்சே! அவளுக்குத் திருமணமானதாக அவர் சொல்லவில்லையே!......சென்னைக்கு எதற்குச் செல்கிறார்? பரிமளாவைப் பற்றிய பேச்சை நான் எடுக்காமலிருந்திருந்தால், எவ்வளவோ சங்கதிகளை அவர் மூலம் அறிந்திருப்பேன். கவலையில் மூழ்கியவரைக் குசலம் விசாரிப்பது நல்லதா?

★

புகைவண்டி ஆம்பூரில் நின்றது. எந்தப் பெட்டியிலிருந்தாவது யாரேனும் இறங்குவார்களா, உட்கார இடம் கிடைக்குமா என்று சன்னல் வழியாகத் தலையை நீட்டிப் பார்த்தேன். பெட்டிகளிலிருந்து நீட்டிய தலைகள் தெரிந்தன. யாரும் இறங்குவதாகத் தெரியவில்லை. சரி, சரி, இருக்குமிடத்தையாவது பறி கொடுக்காமலிருந்தால் போதும் என்று தலையை இழுத்துக் கொண்டேன்.

“வேணு! வேணு!” என்ற குரல் கேட்டது. பழக்கமான குரலாகத் தெரிந்தது. சன்னல் பக்கம் திரும்பினேன். என் பள்ளித் தோழன் முருகன் நின்றுகொண்டிருந்தான். வாய் பிளந்து வியப்புடன் அவனைப் பார்த்தேன். “உள்ளே இடமிருக்கிறதா?” என்றான். “நிற்பதற்கு இருக்கிறது!” என்றேன். நகைத்தவாறே. இரயில் கூவி விட்டது. பெருத்த சிரமத்தின் பேரில், பெட்டியில் உட்கார்ந்திருந்தவர்களின் கால்களை மிதித்து, அவர்களின் ஏசலையும் பெற்று என் பக்கத்தை வந்தடைந்தான் முருகன். “அப்பாட!” என்றான் ஆழ்ந்த குரலில். “சேலத்தில்தானே இருக்கிறாய்?” என்றேன். இல்லை; நான் ஆம்பூரில் இருக்கிறேன்; ஆசிரியராகப் பணியாற்றுகிறேன்” என்றான்.

“எனக்குத் தெரியாதே! எவ்வளவு நாட்களாக?”

“இங்கு வந்து ஒரு வருடமாகிறது” என்று கூறியவண்ணம், நாங்கள் நின்றிருந்த பெட்டியில் சுற்றுமுற்றும் பார்த்தான். வியப்பால் அவன் கண்கள் அப்படியே நிலைத்து விட்டன. அவன் பார்த்த பக்கம் நானும் பார்த்தேன். ஐயங்கார் தலையை வேறு பக்கம் திருப்பிக்கொண்டிருந்தார். நான் ஏதோ சொல்ல வாய் திறந்தேன். பேசாமலிருக்கும்படி முருகன் சமிக்கை செய்தான்.

புகைவண்டி குடியாத்தம் நிலையத்தை அடைந்தது. நின்றிருந்த என் கால்கள் மரத்துப் போய் விட்டன. தரையில் உட்காரவும் இடமில்லை. பரிதாபத்திற்குரிய முகத்துடன் முருகனைப் பார்த்தேன். என் கையைப் பிடித்து அணைத்துக் கொண்டு, வண்டியை விட்டு முருகன் இறங்கினான். சில நிமிடங்கள் சென்றன. வண்டி புறப்பட மணியடித்து விட்டார்கள். தானும் திருமணத்திற்கு இராணிப்பேட்டைக்கு வருவதாகவும், விடியற்காலை வரும் கொச்சின் எக்ஸ்பிரஸில் போகலாமென்றும் கூறி என்னைத் தடுத்து விட்டான் நண்பன். இருவரும் ஓரிடத்திலமர்ந்தோம்.

“என்ன முருகா! ஐயங்காரைப் பார்த்ததும் ஏன் என்னைப்

— 9-ம் பக்கம் —

ஈடனைத் தூக்கிக் கடலில் எறியுங்கள்

சமீபத்தில் சென்னையில் புதிய வகையான திருட்டு ஒன்று நடைபெற்றதைப் பற்றிய விபரங்களைப் பத்திரிகைகளெல்லாம் தெரிவித்திருந்தன. பாங்கியில் பணம் கட்டுவதற்கு வந்திருக்கிறார் ஒருவர். அங்கே அவர் பணத்தை எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்ட ஒரு பேர்வழி தன் கையிலிருந்த ஒரு ரூபாய் நோட்டைக் கீழே வீசி எறிந்து விட்டு அது அவருடைய பணத்திலிருந்து விழுந்து விட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறான். உண்மை என்று அதனை நம்பிவிட்ட அந்த அப்பாவி மனிதர் கீழே குனிந்து அதனை எடுக்க முனைந்தபோது அவரது பணம் முழுவதையும் தட்டிக் கொண்டு போய்விட்டான் அந்தத் திருடன்.

★

இந்தச் சம்பவம் நடந்த இரண்டொரு நாட்களுக்கெல்லாம் எகிப்துமீது பிரிட்டன் போர் தொடுத்து விட்டதாகச் சேதி வந்துள்ளது. காட்டுமிராண்டிக் காலத்திலிருந்து நாகரிக உலகுக்கு வளர்ந்து விட்டுள்ள இன்றைய மனித சமுதாயம் தனது வளத்திற்காகவும் வளர்ச்சிக்காகவும் தனக்குள்ளேயே பல கட்டுதிட்டுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இன்னின்ன முறைகளில் இன்

சும்மா இருந்த இஸ்ரேலைத் தூண்டி எகிப்தின்மீது படையெடுக்கச் செய்துவிட்டு பின்னாலேயே அதன் பாதுகாப்புக்காகத் தானும் படை எடுத்துள்ளதாக—தவறு — பிரிட்டனின் மொழியில் 'நடவடிக்கை எடுத்துள்ள'தாக—அறிவித்து விட்டு களத்திலே இறங்கிப் போரிட்ட வண்ணம் உள்ளது பிரிட்டன்.

சிறிது காலத்திற்கு முன்னர் எகிப்திய மக்களின் இணையற்ற தலைவர் நாசர், சூயஸ் கால்வாயை தேசிய மயமாக்கியதும் அதனால் பாதிக்கப்பட்ட பிரிட்டனும் பிரான்சும் அந்தப் பிரச்னைக்காகவே போர் தொடுக்கத் தயாராகும் எச்சரிக்கைச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வந்ததும் எல்லோரும் அறிந்த சேதியாகும். தனக்குப் பின்னாலே நின்று தான் எச்சில் படுத்திய தண்ணீரை குடித்துக் கொண்டிருந்த ஆட்டுக்குட்டியைத் தன் தண்ணீரை எச்சில் படுத்தி விட்டதாகக் குறிப்பிட்ட வெறி கொண்ட ஓநாயைப் போல இஸ்ரேலின் பாதுகாப்பு என்ற பெயரில் ஈடுபட்டுள்ளது பிரிட்டன் என்பதை எவரும் மறுத்திடத் துணிய மாட்டார்கள். ஏனெனில் போர் தொடுத்த இருபத்துநான்கு மணி நேரத்திற்குள்ளாக எகிப்திய நாட்டிற்குள் நூறுமைல் தூரம் படைகள்

னுடியில் தன் வீட்டுச் சிறுவனைக் கல்வீசச் செய்துவிட்டு, அதைக் கண்டிக்க வந்த கண்ணாடி வீட்டுக்காரரை வீண் சண்டைக்கு இழுத்து முரட்டுத்தனம் செய்யும் 'அதி புத்திசாலி' வேலையைக் கையாண்டுள்ள பிரிட்டனின் ஆட்சித் தலைவரான ஈடனின் போக்கினை வெளிநாடுகளிலுள்ளோர் மட்டுமல்லாமல் இங்கிலாந்து நாட்டவர்களே கண்டிக்கத் தொடங்கியிருப்பது பாராட்டுவதற்குரியதாகும். எதிர்க்கட்சித் தலைவரான ஆட்லியும், பெவானும், எகிப்திலிருந்து போருக்குப் பின்னிடம் பெயரும் பிரிட்டிஷ்காரர்களும் தங்கள் கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர். தொழிற்கட்சி உறுப்பினர்களான கேட்ஸ்கல்லும், மெரிஹஸ்ஸனும் ஈடனைப் பின்பற்றுவோரும் ஆயுத மேந்திய கொள்ளைக்காரர்களென்று குறிப்பிட்டுள்ளனர். 'நாங்கள் ஒன்றும் கொள்ளைக்காரர்கள் அல்ல' என்று கூச்சலிட்ட ஈடனை இடைமறித்து 'ஈடன் சொல்வது சரிதான். கொள்ளைக்காரனுக்கு உதவ வீட்டுக்காரனைக் கடத்தவே நாம் போரிடுகிறோம்' என்று கேட்ஸ்கல் ஏளனமாகக் குறிப்பிட்டிருக்கிறார். தொழிற்கட்சியில் மட்டுமல்லாமல் ஈடனின் சொந்தக் கட்சியான கன்

துராக்கிரமிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு ஐ. நா. பொதுசபை ஒருமுகமாக நிறைவேற்றிய (யுத்த நிறுத்த) தீர்மானத்தை அலட்சியப்படுத்தினால் அந்த ஸ்தாபனம் (காமன்வெல்த்) இருக்க வேண்டிய நியாயமே இல்லை' என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். மேலும் அவர் குறிப்பிடுகையில், 'உலக சமாதானத்தை நிலைநாட்ட பிரிட்டன் கொண்டுள்ள அபிப்பிராயத்துடன் நாம் பூரணமாக ஒத்துப் போகவில்லை என்பதையே நமது காமன்வெல்த் வெளியேற்றம் குறிக்கும். நமது இந்த வெளியேற்றம் ஐ. நா. தீர்மானத்துக்குப் பெரிதும் ஆதரவளிக்கும்.' என்றும் 'எகிப்தில் பிரிட்டிஷ் படைகள் தற்போது குண்டு போட்டுக் கொல்வது சூயஸ் கால்வாயைப் பிடிப்பதற்கே. இஸ்ரேல் - அராபிய நாடுகளுக்கிடையே உள்ள விரோதத்தை நிறுத்தும் நோக்கம் உண்மையில் பிரிட்டனுக்குக் கிடையாது. கால்வாயைப் பிடிப்பதற்காக இந்த நிலைமையை பிரிட்டன் பயன்படுத்திக் கொள்கிறது. தன்னுடைய தவறான செய்கையின் விளைவாக சூயஸ் பகுதியை ஐ. நா. ஸ்தாபனம் மேற்கொண்டு விடுமென பிரிட்டன் எதிர்பார்க்கிறது. அதன் மூலம் சூயஸ் கால்வாயை எகிப்து

எகிப்துப் போர் உலக விடுதலை உணர்ச்சிக்குச் சவால்!

னின்ன வகைகளில் நடந்து கொள்வதுதான் நீதி என்றும், இவை இவைதான் நேர்மையானவை என்றும் சிலபல முடிவுகள் உருவாக்கப்பட்டு அதனையே மனித சமுதாயம் பின்பற்றி வந்துள்ளது. அந்த ஏற்பாடுகள் தனிப்பட்ட மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் இனத்திற்கு இனமும் நாடுகளுக்கு நாடுகளும் என்கிற முறையில் வளர்ச்சி அடைந்துள்ள நிலைதான் ஐக்கிய நாடுகள் அமைப்பாகும். தந்தையைப் பறிகொடுத்த குழந்தைகள், தாயை இழந்துவிட்ட சேய்கள், அன்புக் கணவனை இழந்து அனாதைகளாகி விட்ட ஆரணங்குகள், அருமை மனைவியை சாவுக்குக் காணிக்கை யாக்கிவிட்டு அந்த நினைவிலேயே வாழ்க்கையை முடித்துக் கொண்டவர்கள் ஆகிய பலரையும் பார்த்துவிட்டு, பொட்டலாகிப் போன ஹிரோசிமா, நாகசகி ஆகியவற்றையும் கண்டுவிட்டே அத்தகைய அமைப்புக்குள் தன்னை ஆட்படுத்திக்கொள்ள மனித சமுதாயம் முன்வந்தது என்றபோதிலும், முறையான அந்த முன்னேற்றத்திற்குத் தான் பரம்பரை வைரி என்பதைப் பறைசாற்றும் முறையில் நடக்க ஆரம்பித்துள்ளது 'மேன்மை தங்கிய' பிரிட்டிஷ் அரசாங்கம். குழந்தையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவது என்றொரு பழமொழி உண்டு. அதுபோலவே

முன்னேறிச் சென்று தாக்கியுள்ளன. வெறும் நடவடிக்கையோ, அல்லது அவசரத் திட்டங்களோ இத்தகையவற்றை இவ்வளவு விரைவாகச் செய்து முடிக்கும் என்று சராசரி மனிதர் எவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

பிரிட்டன் தொடுத்துள்ள இந்தப் போர் உண்மையில் உலகத்தின் நல்லவர்களை யெல்லாம் துக்கத்தில் ஆழ்த்தி யுள்ளது. தமது நாட்டுக்கே உரித்தானதொரு கால்வாயை தமக்கே ஆக்கிக்கொண்ட எகிப்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்முரசம் ஆர்க்கும் பிரிட்டனின் இந்தப் போக்கு விடுதலை பெற்றுள்ள நாடுகளுக்கெல்லாம் அறைகூவலாகும். அந்த அறைகூவலை அலட்சியமாக ஏற்றுக் கொண்டுள்ள எகிப்தின் தலைவர் 'எதற்கும் தயங்கமாட்டோம். உடல் பொருள் ஆவி தந்தேனும் உரிமையைக் காப்போம். பட்டாளத்தார் மட்டுமல்லாமல் பொதுமக்களே அணியாகத் திரண்டு படையாக அமைவோம்' என்று முழங்கி இருக்கிறார். அவருக்கு ஆதரவாக உலகெங்கிலுமுள்ள மனிதர்கள் வாழும் நாடுகள் பிரிட்டனின் போக்கினைக் கண்டித்துள்ளன. என்றபோதிலும் பிரிட்டன் வழக்கமான தனது ஏகாதிபத்தியப் போக்கினை இம்மியும் விட்டுக் கொடாது தனது போக்கிலேயே சென்றவண்ணமுள்ளது.

பக்கத்து வீட்டு ஜன்னல் கண்

சர்வேடிவ் கட்சியினரிலேயே பலர் இந்த வெறிச் செயலைக் கண்டித்துள்ளனர். ஒரு அமைச்சர் இதனையே காரணமாகக் காட்டி அமைச்சரவைக்கு விலகல் கடிதம் அனுப்பி வைத்துள்ளார். கன்சர்வேடிவ் கட்சியின் ஏடான 'மான்செஸ்டர் கார்டியன்' கூடத் தனது கண்டனத்தைத் தெரிவிக்கத் தவறவில்லை என்பது மட்டுமல்ல இந்தப் போரினை 'ஈடன் போர்' என்ற பெயரிலேயே கையாண்டி செய்துள்ளது.

ஈடனின் இந்த முறைகெட்ட தன்மையைக் கண்டிப்போரில் நமது இந்தியத் துணைக்கண்டத்து முதலமைச்சர் நேருவும் ஆச்சாரியாரும் காணப்படுகின்றனர். பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய நேரு பண்டிதர், 'உலக அமைதி என்ற காரணம் காட்டி போரில் ஈடுபட்டிருப்பின் பிரிட்டன் என்ன உலகப் போலீசா?' என்று கேட்டிருக்கிறார். எகிப்திலிருந்து பிரிட்டன் தன் படைகளை வாபஸ் பெறுவிடில் இந்தியா காமன்வெல்த் திலிருந்து விலகிவிடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். அதனைத் தொடர்ந்து அறிக்கை வெளியிட்டுள்ள ஆச்சாரியார் காமன்வெல்த் வெளியேற்றத்தை ஆதரித்துள்ளது மட்டுமல்லாமல் அதனைத் தெளிவாகவும் வற்புறுத்தி யிருக்கிறார். 'காமன்வெல்த்தின் பிரதான பாகஸ்தர் (பிரிட்டன்) விடாப் பிடியாக

இழக்கும்படி செய்யும் நோக்கமும் ஈடேறும்'. 'எகிப்துடன் பிரிட்டன் தொடுத்துள்ள யுத்தத்தை உலகமே கண்டிக்கிறது. ஐ. நா. சபை கூடி ஆட்சேபத் தீர்மானமும் நிறைவேற்றியுள்ளது. பிரிட்டனிலும் பார்லிமெண்டில் சர்க்காருக்கு எதிராக விடுத்த ஓட்டுகள் அதிகம். பொதுத் தேர்தல் தற்போது நடக்குமானால் சர் அந்தோணி ஈடனின் சர்க்கார் அநேகமாக கவிழ்ந்து விடும். ஈடனின் பிடிவாதம் பிரபல பிரிட்டிஷாருக்கு அதிக அவமானத்தைத் தந்து கொண்டிருக்கிறது' என்றும் தெளிவாக நிலைமைகளை விளக்கியுள்ளார்.

காமன்வெல்த் அமைப்பு தேவையற்றதும் தெளிவற்றதும் ஆகும் என்பதையும் அந்த அமைப்பினால் நாம் எந்தவித லாபமும் பெறவில்லை என்பதையும் அந்த அமைப்பில் இருப்பது காரணமாக பிரிட்டனுக்குப் பக்கதாளம் போடும் விதத்தில் நாம் ஆகிக் கொண்டிருக்கும் முறையையும் குறிப்பிட்டு காமன்வெல்த்திலிருந்து இந்தியா விலக வேண்டிய அவசியத்தை நாம் பலமுறை வற்புறுத்தி வந்துள்ளோம். உலகப் போர் மூண்டு விடும் என்ற கவலை ஏற்பட்டுள்ள இத்தகு சூழ்நிலையில் இந்தியா காமன்வெல்த்திலிருந்து விலகுவதே சிறந்ததாகும். ★

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 3 || 10—11—56 || இதழ் 11

மகளிர் மன்றம்

திரும்பத் திரும்பச் செய்யும் காரியங்களும் பழக்கங்களும், மனிதனுக்குக் குணங்களாக மாறிவிடுகின்றன. மீறமுடியாத சமுதாயக் கட்டுதிட்டங்களுக்குள் அடங்கிக்கிடப்போரின் நடைமுறைச் செயல்கள் கூட அவர்களின் குணங்களாக வளர்ந்து அந்த அடிப்படையிலேயே அவர்களின் உள்ளங்களும் அமைந்து விடுகின்றன. தென்னாட்டைப் பொருத்த வரையில் பெண்கள் முன்னேறுதிருப்பது, சமுதாயம் அவர்களுக்கு விலங்கு பூட்டியிருப்பதினால் ஏற்படும் விளைவு என்பதைக் கற்றோர் அறிவர், மற்றவர்களைப் பற்றி அக்கரையில்லை.

படித்தவர்கள்-பட்டம் பெற்றவர்கள்-ஏன், பட்டமளிப்பு விழாக்களையே முன்னின்று நடத்துபவர்கள்கூட பெண்களை மௌனிகளாய் பிள்ளைப்பூச்சிகளாய்த்தான் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். எத்தனை படித்தவர்கள் இருந்தாலும் அந்த இல்லத்தில் பண்பாடுள்ள ஒரு பெண் இருப்பதற்கான ஏழிலை, தூய்மையை, கட்டுப்பாட்டைப் பார்க்கமுடியாது என்பதை அவர்கள் அறிந்திருந்தும் அந்தக் கொள்கையை பகிரங்கமாக வலியுறுத்த முன்வருவதில்லை. அவர்கள் தாய்க்குலத்தின் சுனாங், குழந்தைகளுக்கு ஆபத்து என்று கருதும் 'மேதை'களாகவே வளர்ந்துவிட்டவர்கள்; வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்திலேயே பெண்ணினத்தைப் பம்பரங்களாக்கிக் கொள்வதற்கான வழி வகைகளைச் சட்டத்தின்மூலம் செய்துகொண்டவர்கள். அப்பேர்ப்பட்டவர்களிடம் அன்னையினத்தின் முன்னேற்றத்திற்கான திட்டங்களையும், திருவினைகளையும் எதிர்பார்ப்பது புளியம் பழத்தில் பாதாம் பருப்பை எதிர்பார்ப்பதற்கும் மேலான பைத்தியக்காரத்தனமாகும். தமிழ்மக்கள் அதற்கு விதிவிலக்கு. (தமிழ் பேசுவோரெல்லாம் தமிழரல்ல) நிலாம்பரி பாடி காலமெலாம் பாதுகாத்து, தேடிப் பிடித்துத் தேக்குமர நடைவண்டி வாங்கிக்கொடுக்கும் தாயன்பைக் கசக்கி எறியும் துணிவு நமக்கு ஏது? குடும்பங்களை, பல குடும்பங்களைக் கொண்ட நகரங்களை, பல இலட்சக்கணக்கான நகரங்கள் கொண்ட உலகத்தை உய்விக்க பெண்களின் தொண்டு எவ்வளவு தேவை என்பதைப் புரிந்து கொள்ளச் சக்தியற்றவர்களுக்கே அத்தகைய துணிவு பரம்பரைப் பாத்தியதையாக இருக்கட்டும்! நமக்குத் தேவையில்லை. பெண்கள்,

தாயக விடுதலைக்கு பாடுபட வேண்டும்;

பெண்ணடிமை தீர்க்கவேண்டும்

சமுதாய மறுமலர்ச்சிக்குச் செயல்புரிய வேண்டும்.

—என்ற கருத்தைக் கொண்டு இடைவிடாதுழைத்து வெற்றிமேல் வெற்றி பெற்றுக்கொண்டு வருபவர்கள் நாம். சுயமரியாதை இயக்க காலந்தொட்டு அந்தப் பெருமை தொடர்ந்துவருவது குறிப்பிடத்தகுந்தது. அதையொட்டி, பெண்களில், தி. மு. கழகத்தில் அங்கம் வகிப்போரும், பற்றுக்கொண்டோரும், அக்கறையுள்ளோருமாகச் சேர்ந்து நவ 4ம் தேதியன்று சென்னையில் 'மகளிர் மன்றம்' ஒன்று நிறுவி அதன் துவக்க விழாவை நடத்தியிருப்பது, மகிழ்ச்சிக்குரியதாகும். தென்புலத்தின் தனிப் பெருந்தலைவரான அறிஞர் அண்ணா அவர்களின் துணைவியார் ராணி அம்மையார் அவர்கள் மன்றத்தின் துவக்க விழாவில் கலந்துகொண்டு ரத்தினச் சுருக்கமான சொற்பொழிவை நிகழ்த்தி, வைத்தார்கள். 'இந்த மகளிர் மன்றம். மாம்பலத்தில், மைலாப்பூரில் இருப்பதைப் போன்ற 'லேடீஸ் கிளப்' அல்ல! என்று அவர்கள் குறிப்பிட்டுப் பேசியிருப்பது, துவக்கப்பட்டிருக்கும் மகளிர் மன்றத்தின் பொறுப்பின் விளக்கச் சூத்திரமாக அமைந்திருக்கிறது. வேடிக்கைவிளையாட்டுகள் நடத்தி, வேகமாக ஓடும் காலத்தை இன்னும் அதிவேகமாக ஓடச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் இந்த மகளிர் மன்றம் ஆரம்பிக்கவில்லை என்பதையும் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலேயே தமிழ் வளர்ச்சிக்கென மன்றங்கள் ஏற்படுத்த வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டதுபோல, தாய்மொழி இலக்கியங்களில் புனிதமான இடத்தைப் பெற்றுள்ள தமிழ்ப் பெண்களை நாற்றம்பிடித்த சமுதாயச் சேற்றிலிருந்து தப்பிக்கச்செய்யவும் தமிழகத்திலேயே மகளிர் மன்றம் ஒன்று நிறுவும் நிலை வந்தது தென்னாட்டின் பலவீனம்தான் என்றாலும், தக்கோரால் நிறுவப்பட்டு, தலைவர் அண்ணா அவர்களின் அறிவுரை பெற்று தலைநகரில் செயலாற்றத் தொடங்கியிருக்கும் மகளிர் மன்றம் நற்பணி புரிந்து வெற்றிமலர்களை தமிழ்த்தாயின் பொற்பாதங்களில் குவித்து மகிழும் என நம்புகிறோம் - ஆசைப்படுகிறோம்.

காரை முத்துப் புலவர் எழுதும்

தேர்தல் நவரசம்

ஆடுபவர் : குமாரி காங்கிரசு
நட்டுவனார் : விருதுநகர் காமராசர்
வயலின் : கக்கன்
மிருதங்கம் : டி. டி. கிருஷ்ணமாச்சாரி
மேடை : தமிழ்நாடு ஆடை : அரை நிர்வாணம்

2. நகை

[இருவரும் கைகோர்த்து ஆடும்போது, தொந்தியாதிபதி கீழே விழுந்துவிடுகிறார். குமாரி காங்கிரசு கைதூக்கி விடுகிறாள். தொந்தியாதிபதி, உடம்பைத் துடைத்துக்கொண்டு ஆசனத்தில் அமருகிறார். குமாரி காங்கிரசு ஆடுகிறாள்.]

என்னபருமனடா! இவர்க்கு எத்தனை தொந்தியடா!
கன்னிஎனதிடை காட்டுமர மென
சுற்றுப் பெருத்தது, போல இவருடல் (என்)

சென்னை அரசியல் சந்தையிலே-நான்
செய்த செயல்களின் தோற்றமடா!
கண்ணையும் காதையும் தோண்டுதடா-பழம்
'கர்மவினை' வந்து மூண்டதடா! அட (என்)

மாதர்கள் தங்கள் மனதுக் கிசைந்ததோர்
காதலன் தம்மையே காண்பாரடா-அந்தக்
காதலுக்கென் றொருகால் மரியாதையும்
காணாத இவரைநான் கண்டேனடா (என்)

கட்டிப் பிடித்தால் இக்கன்னி வயிற்றினில்
முட்டுதடா தொந்தி-கொஞ்சம்
எட்டி யிருந்தாலோ நட்டுவனார் என்னைத்
தட்டி விடுகிறார் முந்தி!

''அடி-காங்கிரசு என்ன காதல் உனக்கு!
காசு கிடைத்தாலே போதும்-அதைத்
'தாங்கி'ப் பழகிக்கொள் என்றாரடா! மனம்
தாளவில்லை! சற்றும் தாங்கவில்லை! அட (என்)

கொள்கைஎனும் ஒருகோமகன் பால்எனைக்
கொடுத்திருந்தார் அந்தவேளை!-பிறர்
குற்றம்சொல்லா வண்ணம் வாழ்ந்திருந்தேன்; பின்னர்
கொல்லப் பட்டான் அந்தக் காளை!
கள்ளர்கள் என்னைக் கவர்ந்துவிட்டார்-இந்தக்
காமராசர் செய்த வேலை-கொஞ்சும்
காதலுக்கான வயதுமில்லா இந்தக்
கர்மங்களை நிதம்தாங்குகிறேன்! ஐயோ! (என்)

பகலிலே கட்டிலில் படுத்திருந்தார் என்னைப்
படுக்கச் சொன்னார் இவர்பக்கம்-கட்டில்
பாதிமுறிந்தது நானும் படுத்ததும்
படக்கென்று சாய்ந்தது! வெட்கம்!
''சுதந்திரம் வந்ததும் கொன்றுவிடு!'' எனச்
சொல்லியிருந்தாரே காந்தி!-அதைச்
செய்திருந்தாலும் இத்தொல்லை யில்லாமலே
சேர்ந்திருப்பேன் பரசாந்தி! அட (என்)

ஒவ்வொரு தேர்தலிலும் எந்தன் உயிரை
ஒவ்வொரு பாகமாய் வாங்கி-என்
கொவ்வை இதழையும் கொத்திக் குடிக்கிறார்
கொதிக்கிறதே மனம், பாங்கி!
வரும்பொதுத் தேர்தலில் அண்ணாவின் கட்சியும்
வருகிறதாம் எனைநோக்கி!-அது
வந்தாவதுஎன்னைக் கொன்றுவிட்டால் பின்னர்
வாழும் இந்தநாடு! அட (என்)

(தொடரும்)

தேர்தல் வருகிறது; தெரிந்துகொள்ளுங்கள்:

5. சி. சுப்பிரமணியம்

[சென்ற வாரத் தொடர்ச்சி)

[இவை வடிவுற்ற வெண்பாக்கள் அல்ல; **'வெண்பா மாதிரி'** *உதாரணம்: "சோஷலிஸ மாதிரி"]*

காட்டமுறச் சாடினர் காமராசர் தம்மை;
நாட்டமுறச் சேர்ந்தின்று நடப்பதேன்? பாட்டாகேள்
"ஊடுதல் காமத்திற் கின்பம், அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்!"

தேவிகுளம் போயும் செங்கோட்டை தான்போயும்
பாவிமனம் பதைக்கா தேன்சொல்வீர்!—பாவாய்கேள்
"உயிர்நீப் பின்வாழாக் கவரிமா வன்னர்
மயிர்நீப் பர்மானம் வரின்!"

என்னதுறந்தார்? எதைத்து றந்தார்? தியாகத்திற்கு
என்னபொருளை இவர்கொண்டார்?--மின்மாதே
மானந்துறந்தார் மதிதுறந்தார்! மற்றென்ன
வேணும் துறக்க? விடு!

கத்தி பிடித்திருந்தால் கடை வைத்திருப்பார்
புத்தி இருந்தால் புகழ்பெறுவார்--சக்தி
ஒருபாழும் இல்லை! உவந்தே தமிழ்நாட்டை
அரசாள வந்தார் அறி!

பிள்ளைபெறுதீர்! பெற்றுலும் தமிழ்நாட்டுப்
பள்ளிக்கனுப்பாதீர் பாவையீர்!--பள்ளியெனும்
வாழ்வாக்குங்கல்வி வளஞ்சேர்க்கும் கூடத்தை
ஆள்வார் இவரென்பதால்!

சென்ற தலைமுறைகள் செய்துவிட்ட 'பாவம்'தான்
நின்று தொலைக்குதடா நீள்தமிழை!--இன்று
நாவற்றப்பேசும் நமதமைச்சர் தானந்தப்
பாவத்தின் மொத்தப் படம்!

இவை அவரே சொல்வது:

"வாழ்கிறது வடநாடு; வளமான தென்னாடு
தேய்கிற துஎன்றுநீர் செப்புகிறீர்!--போகிறது!
இந்தப்பதவி எனக்கிருந்தாற் போதும்;வே(று)
எந்தப்புறம் வாழ்ந்தாலென்?"

ஆவடியைக் கண்டோம்; அன்றுடம் டில்லிக்குக்
காவடியும் கொண்டோம்! கருதாது--காலடியில்
போட்டே எனை நசுக்கும் பொல்லாத கழகத்தை
வாட்டியே காண்பேன், வகை!

காபி என்றார்நேரு; கையில்கூ ஜாதூக்கி
சாப்பிடுங்கள் என்றேன்; தயங்காது--நாப்பிடுங்கி
செத்திருப்பார் மற்றோர்! செய்தேனு? அதுமானம்
வைத்திருப்பார் காணும் வழி!

— கதா.

கலவி முடியாக் காமம்!

*ஆழிவாய் முத்தம் அடுக்கிய பற்கள்
வேழத் தலையென விம்மும் மார்பகம்
தாழை மணக்கும் தளிர்படு மேனி
செங்காந் தட்கை; சிறுமலர் நாசி;
கனிபிளந் தன்ன கன்னக் கதுப்பு
ஆடவர் உதடுகள் ஆவல் மீதுற
கூடத் துடிக்கும் கோவை உதடுகள்!
பாதந் தொட்டுப் பார்க்கினும் உலக
மலருக் கெல்லாம் மலரேனும் மென்மை!
அன்னவள் அழகுச் சின்னவள் ஓர்நாள்
தோழியை விழித்துச் சொல்லுவள்: "தோழி!
தென்னைப் பாளையில் தேனீக் கூட்டம்
தேனைச் சேர்க்கும் சிறப்புடைத் தாகிய
புனல்சூழ் நாட்டுப் பொன்னி வளவன்
ஆளை மயக்கும் காளை, அந்தியில்,
தூங்கும் என்முன் தோன்றினன், தோன்றி,
கையகம் தொட்டும் மெய்யகம் தொட்டும்
கட்டிப் பிடித்துக் கையொ டுகையை
இட்டுப் பிணைத்தும் எடுத்த னன்முத்தம்!
முத்தம் கொண்டதால் மூண்டது காமம்!
கட்டுக் காளை கன்னியின் உடலைத்
தொடடாற் காமம் தோன்றுதா சொல்?
தோன்றி, இன்பச் சுகத்தில் தள்ள,
காவலன் என்னைக் கலப்பான் என்று
ஆவன செய்து, ஆவலில் அன்னவன்
வதனம் நோக்கி, வாங்கிய கையை
உதட்டில் வைத்து ஒன்று கொடுத்து,
பள்ளியிற் சற்றுத் தள்ளிப் படுத்து,
"பருகுக!" என்றேன்! பாவிஎன் சொல்வேன்!
இடையில் ஒன்று என்னவோ போலத்
தடுத்தது! ஊடல் தானது! சரியாய்
நினைவு மில்லை; அதனை நீக்கி,
"காவல! பெண்மைக் களத்தினைக் கொள்க!"
என்றேன்! ஐயோ என்னடீ சொல்வேன்!
காவலன் இல்லை! காதல் பாதியில்
நின்றது! அடியே! நிறைந்த காமம்
பொங்கும் வேளை போனதே கனவு!"
என்று வாடிய இன்ப ஓவியம்
முத்தொள் ளாயிர முறுவலில் ஒன்றும்!
சோலை வளமும் தொலையாக் காதலும்
வாழ் வுக்கிலக்கண வகையும், காம
விளையாட் டெல்லாம் விளங்கும் காட்சியும்,
எப்படித் தொடுவது எப்படிப் பாவையைப்
பின்புற மிருந்து பிடிப்பது, சோலையில்
மார்பகம் சேர்த்து மகிழ்வது என்னும்
விந்தையும் காட்டும் வியன்மிகு பாக்கள்
நூற்று முப்பது, நூபுர ஒலிபோல்
முழக்கும் ஏடு முத்தொள் ளாயிரம்!
கருத்துச் சொன்ன கவிதை இதுதான்:*

**ஊடலென வொன்று தோன்றி யலருறூஉங்
கூடலி ழந்தேன் கொடியன்னாய்—நீடெங்கின்
பாளையிற் றேன்றெடுக்கும் பாம்புன னீர்நாட்டுக்
காளையைக் கண் படையுட் பெற்று.**

— *முத். 99*

முன் கதை

1945-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஒருநாள். அன்றுதான் தியாகி தேசானந்தர்சிறையிலிருந்து விடுதலை பெற்றுர். அவர் விடுதலை அடைந்த அந்த நாளில் வண்ணை யம்பதியில் ஒரு பெரிய பொதுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில்தான் தியாகி தேசானந்தர் சொற்பொழிவாற்றினுர். மக்கள் ஏக ஆரவாரம் செய்தனர்.

கூட்டம் முடிந்தது. அன்றைக்கே தேசானந்தர் தம் சொந்த ஊரான மேலூருக்குப் புறப்பட்டார். அவர் ஏறிய ரயிலிலேயே, அவரைத் தொடர்ந்து ஒரு பெண், அவசர அவசரமாக ஏறிக்கொண்டாள். போர்ட்டர் அவளது பெட்டியைக் கொண்டு வந்து ரயில் பெட்டியில் வைத்துவிட்டுச் சென்றுன். அந்தப் பெண்ணின் முகம் வெளிறி இருந்தது. அவள் உடம்பிலே இரத்தமே இல்லை. உட்காருவதற்கு இடமின்றித் தவித்தாள். தேசானந்தர் கொஞ்சம் விலகி உட்கார்ந்து கொண்டு அந்தப் பெண்ணுக்குச் சிறிது இடம் தந்தார்.

தேசானந்தர் அந்தப் பெண்ணுடன் உரையாட ஆரம்பித்தார். அந்தப் பெண்ணைப் பற்றிய விவரங்களை அவளிடமிருந்தே கிரகித்துக் கொண்டார். பின் அவர் தூங்கி விட்டார். திருச்சியில் விழித்துப் பார்த்தபோது அந்தப் பெண்ணை வண்டியில் காணும். அவளது பெட்டி மட்டும் இருந்தது. பெட்டியுடன் தன் வீட்டுக்கு வந்து சேர்ந்தார் அவர். அந்தப் பெட்டியைக் கண்ட அவரது மனைவி கோமளம் "அந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது ?' என்று வினவினுள். தேசானந்தர் அந்தப் பெட்டியையும்-பெட்டி கொண்டுவந்த பெண்மணியையும்-அவள் அதனை ரயில் பெட்டியில் வைத்துச் சென்றுவிட்ட வரலாற்றையும் சொல்லிமுடித்தார். அத்துடன் அந்தப் பெண்ணின் கணவனது முகவரி தனக்குத் தெரியும் என்றும் அதை அவனிடம் திருப்பச் சேர்த்துவிடலாம் என்றும் சொன்னுர். கணவனது பதிலை எதிர்பாராமலேயே பெட்டியைத் திறந்த கோமளம், 'ஆ' என்று அலறினுள். என்ன ஆச்சர்யம் ? பெட்டிக்குள் ஒரு குழந்தை கிடந்தது. தேசானந்தர் திகைத்துவிட்டார். அதனருகில் கிடந்த கடிதத்தைப் பிரித்தார்; படித்தார்.

ரயிலில் அவர் சந்தித்த பெண் தான் அந்தக் கடிதத்தை எழுதியிருந்தாள். தேசபக்தர் சூடாமணியை நம்பித் தன் வாழ்வை வீணுக்கிக் கொண்ட வேதனைமிகுந்த வரலாற்றை அவள் கடிதத்தில் வரைந்திருந்தாள்.

கடிதத்தைப் படித்து முடித்தார். ரயிலில் அவர் சந்தித்த பெண் தன்னிடம் பொய் சொல்லியிருக்கிறுள் என்பதைத் தெரிந்து கொண்டார்.பிறகு குழந்தையைஒரு துண்டில் வைத்துச் சுற்றி, தோட்டத்தில் கொண்டு புதைத்தார். அன்று இரவே சென்னைக்குத் திரும்பிவிட எண்ணினுர். அவரது மனைவி கோமளம் தடுத்து விட்டாள்.

இரண்டு நாட்களுக்குப் பின்னர் தேசானந்தர் சென்னைக்குப் பயணமானுர். காரைக்குடியில் ரயில் ஏறினுர். அவர் ஏறியிருந்த பெட்டியில் ஒரு வாலிபனும் இருந்தான். அவனுடன் வேடிக்கையாகப் பேசிக் கொண்டே வந்தார் தேசானந்தர். வண்டி புதுக்கோட்டையில் வந்து நின்றது, ஒரு வாலிபனும், ஒரு இளம்பெண்ணும் தேசானந்தர் இருந்த பெட்டியில் ஏறினர். அவர்கள் இருவரும் பேசி மகிழ்ந்த விதத்தைப் பார்த்து அவர்கள் இளங்காதலர்கள் என்று நிச்சயம் செய்துகொண்டார் அவர். தேசானந்தர் அவர்களுடன் உரையாடிக் கொண்டே வந்தார்.திருச்சி வந்தது. அந்தப் பெண்ணும் வாலிபனும் இறங்கினர். அந்தப் பெண் ஒரு நாடகக் காரிபோல் தோன்றினுள். அந்த வாலிபனை, அவள் 'சூடாமணி' என்றழைத்தாள். அதைக் கேட்டதும் தேசானந்தர் திடுக்கிட்டார். அவன்தான் சூடாமணி என்று அறிந்து தானும் வண்டியிலிருந்து கீழே இறங்கிவிட்டார். அதற்குள் அவர்கள் இருவரும் எங்கேயோ சென்றுவிட்டார்கள்.

தேசானந்தர் திருச்சி நகரம் முழுவதும் தேட நினைத்தார். ஒரு ஓட்டலில் தங்கினுர். எதிர்பாராத விதமாக, சூடாமணியும், அந்த நாடகக்காரப் பெண்ணும் அவர் எடுத்துக்கொண்ட அறைக்கு அடுத்த அறையிலேயே தங்கியிருந்தனர். தேசானந்தர், சூடாமணியைச் சந்தித்தார்: சீதாவைப் பற்றி அவனிடம் பேசினுர். அவளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் சொன்னுர். அவனும் ஒப்புக் கொண்டான். அந்த நேரத்திலே எதிர்பாராத விதமாக சீதா அலங்காரத்தோடு ஒரு மைனருடன் வந்து கொண்டிருந்தாள். தேசானந்தர் ஆச்சரியப்பட்டார். 'சீதா' என்று அவளை அழைத்தார். அந்தப் பெண் திகைத்தாள். தான் சீதா அல்லவென்றும் தன் பெயர் மனேன்மணி என்றும் சொன்னுள். மேலும் அந்தப் பெண் சூடாமணியைக் கண்டு திகைப்படையவில்லை. இது, தேசானந்தருக்குக் குழப்பத்தைத் தந்தது. சீதாவுடன் வந்த மைனர் 'அறைக்குள் வாருங்கள் ; பேசலாம்' என்றுன். தேசானந்தர் சூடாமணியைக் கையோடு பிடித்துக் கொண்டு அந்த அறைக்குள் நுழைந்தார். அந்த நாடகக்காரி, அறையில் குழப்பத்தோடு உட்கார்ந்திருந்தாள்.

அறைக்குள் சென்ற தேசானந்தர் அமைதியோடு எல்லாரையும் விசாரித்தார். அந்தப் பெண்ணிடம் தான் அவளை ரயிலிலே சந்தித்ததை நினைவுபடுத்தினுர். அப்போதுதான் அவளுக்கு விஷயம் புரிந்தது. அவள் பெயர் உண்மையிலேயே மனேன்மணிதானும். தாய் மாமனையே மணந்துகொண்டாளாம். அவன் பெயர்தான் அருணசலமாம். அவன் அவளைக் கவனிக்காமல் விரட்டிவிட்டானும். அவள் கூட வந்த வாலிபன்தான் அவளை அதிகமாகக் காதலித்தானும். அவளையே அவன் பதிவுத்திருமணம் செய்துகொள்ள விரும்பியதாகவும், சென்னையில் தெரிந்து கொள்வார்கள் என்றெண்ணித் திருச்சிக்கு மணமுடிக்க வந்துவிட்டதாகவும் சொன்னுள். முதல் நாளே அந்த வாலிபன் திருச்சி வந்து விட்டானும். மறுநாள் அவள் வீட்டிலிருந்து பெட்டி நிறையப் பொருள்களுடன் வந்துவிட்டாளாம். ரயில் புறப்படச் சில நிமிடங்களே இருந்தமையால், அவசரமாக ஒரு போர்ட்டரைக் கூப்பிட்டுப் பெட்டியைத் தூக்கிவா என்று கூறி விட்டு, ரயிலில் வந்து ஏறிக்கொண்டாளாம்.அவனும் ஒரு பெட்டியைத் தூக்கிக்கொண்(டு) வந்து வைத்தானும். அவளும், தன் பெட்டிதான் அது என்று எண்ணி அதற்குக் கூலியைக் கொடுத்து அனுப்பி விட்டாளாம். விழுப்புரத்தைத் தாண்டி ரயில் வந்துகொண்டிருந்தபோது துண்டு எடுப்பதற்காகப் பெட்டியைத் திறந்தபோது பெட்டி பூட்டாமல் இருந்ததாம். பெட்டியைத் திறந்தபோது, செத்துப் போன குழந்தையொன்று கிடந்ததாம். அப்போதுதான் அது தன் பெட்டியல்ல என்பதை உணர்ந்தாளாம். பெட்டியை மூடிவைத்து விட்டு திருச்சிக்கு முதல் ஸ்டேஷனிலேயே இறங்கிவிட்டாளாம்.

இதைக் கேட்டபின்தான் தேசானந்தரின் சந்தேகம் தீர்ந்தது, சூடாமணியை அழைத்தார், அந்த நாடகக்காரப் பெண்ணை அழைத்து வரும்படி சொன்னுர். அவள் வந்தாள். அவள் கையிலே பத்து ரூபாய் கொடுத்து, 'இனிமேலாவது கௌரவத்தோடு வாழ்' என்று சொல்லி அனுப்பிவிட்டார். அவளும் சென்றுவிட்டாள். அதன் பின் அவர் சூடாமணிக்கு அறிவுரை கூறினுர். இன்னும் நான்கு நாளில் தான் சென்னைக்கு வருவதாகவும், அங்கே சூடாமணியைச் சந்திப்பதாகவும் சொல்லி,அவனது முகவரியை வாங்கிக்கொண்டார் அன்றிரவே மேலூருக்குப் புறப்பட்டார். சூடாமணி சென்னைக்குப் புறப்பட்டான். இரவு ஒரு மணிக்குத்தான் தேசானந்தர் மேலூர் வந்து சேர்ந்தார். வந்த அசதியில் பெட்டியை வைத்துவிட்டு தூங்கி விட்டார். காலை எட்டு மணி இருக்கும். திடீரென்று அவரது மனைவி கோமளம் ஒரு செய்தியைச் சொல்லி அவரை எழுப்பினுள். என்ன ஆச்சரியம், அவரது பெட்டிக்குப் பதிலாக வேறு பெட்டி அங்கே இருந்தது. ★

6

முதலில் அவர் சென்னையி லிருந்து வரும்போது. வேறொரு பெண்ணுடைய பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்தார். இப்போது, தன் பெட்டியை விட்டு விட்டு, மறந்துபோய், யாருடைய பெட்டியையோ தூக்கி வந்து விட்டார். "தலைப்பா மாற்றி வேலை" என்பார்களே. அது மாதிரி எவனாவது-தன் கூடவே வந்து "பெட்டி மாற்றி வேலை" செய்கிறானோ என்ற சந்தேகம் வந்துவிட்டது, அவருக்கு.

பெட்டியை அவசரமாகத் திறந்து பார்த்தார். நல்லவேளை! அதற்குள்ளே குழந்தை இல்லை! அதற்குப் பதிலாக, ஏராளமான ரூபாய் நோட்டுக்கள் இருந்தன! சில போஸ்டுக் கார்டுகள் எழுதப்பட்டுக் கிடந்தன. தேசானந்தர் அந்தக் கார்டுகளைப் படித்துப் பார்த்தார். ஏதோ புரியாத வார்த்தைகள். தமிழில்தான்— எழுதப்பட்டிருந்தன. அவற்றி லிருந்து ஒரு விஷயத்தை மட்டும் யூகிக்க அவரால் முடிந்தது. யாரோ சிலர் கள்ள நோட்டு அடிக்கிறார்கள்! அவர்களுக்குள் சில 'பரிபாஷைகள்' நடக்கின்றன. அதில் எவனோ ஒருவன் கள்ள நோட்டுக்களை மாற்றும் வேலையில் ஈடுபட்டு, ரயிலில் வந்திருக்கிறான். போலீஸ்காரரர்களைக் கண்டதும் பெட்டியை ரயிலிலேயே விட்டு விட்டுப் போய்விட்டான்!—இந்த யூகம் சரிதான் என அவரே முடிவு கட்டிக் கொண்டார். இப்போது அவரிடத்தில் இன்னொரு துப்பறியும் வேலையும் ஒப்படைக்கப் பட்டிருப்பதாகக் கருதினார்.

"எல்லாம் அயோக்கியத் தனம்! நாட்டில் ஒரு யோக்கியன் கூட இல்லை!" என்றார் ஆத்திரத்தோடு!

"அப்படிச் சொல்லாதிங்க! ஒருவர் கூடவா இல்லை" என்று கூறி, தன் கணவன் பெயரை அதிலிருந்து நீக்கினாள், கோமளம்.

"இந்தத் திருட்டுக் கூட்டத்தை எப்படியும் கண்டுபிடிக்க வேண்டும்! இதையெல்லாம் முளையிலேயே கிள்ளினால்தான் நாடு உருப்படும்" என்றார், தேசானந்தர்.

"ஏன், எல்லா வேலையையும் உங்க தலையிலே போட்டுக்கிறீங்க! பேசாமெ, இதை அப்படியே கொளுத்திவிட்டு, பல் துலக்குங்க!" என்று சற்று ஆத்திரமாகவே கூறினாள், கோமளம்.

"இல்லை இல்லை! இந்த நாட்டில் எனக்குச் சில கடமைகள் இருக்கின்றன. எந்த நேரத்திலும் அதைச் செய்வதே என் லட்சியம்! நீ பேசாமலிரு. இதனால் என்ன வந்தாலும் சரி!" என்று கூறிய தேசானந்தர், பெட்டியைத் தூக்கிக்கொண்டு வெளியேறினார். கோமளம் அலுத்துக்கொண்டு அப்படியே உட்கார்ந்தாள்.

பெட்டியோடு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார் தேசானந்தர். அது வெள்ளைக்காரன் காலமாதலால் போலீஸ் ஸ்டேஷன்கள் எப்போதும் பூரண சுறுசுறுப்புடன் இயங்கும். தேசானந்தர் சென்ற வேளையில் சப் இன்ஸ்பெக்டர் இல்லை. பல போலீஸ்காரர்கள் முன்னும் பின்னும் நடந்து கொண்டிருந்தார்கள். கதர்ச் சட்டைகளைக் கண்டாலே அவர்களுக்குக் கடுங்கோபம் வரும். ஆனால் தேசானந்தரிடம் அவர்களுக்குக் கோபம் பிறக்கவில்லை. காரணம், அவரது அடக்கமான சுபாவத்தை அவர்கள் அறிவார்கள். பொதுவாக தேசானந்தர் என்றாலே மேலூர் முழுக்க நல்ல மதிப்பும் மரியாதையும் உண்டு. அதனால் ஒரு நாற்காலியைப் போட்டு அவரை உட்காரச் சொன்னார் ஒரு போலீஸ்காரர். உட்கார்ந்த தேசானந்தர், சப் இன்ஸ்பெக்டர் எங்கே என்று விசாரித்தார். அதேசமயத்தில் சப் இன்ஸ்பெக்டரும் உள்ளே நுழைந்தார். இருவரும் வணங்கிக் கொண்டார்கள். தேசானந்தர் தன் கையிலிருந்த பெட்டியை மேஜைமீது வைத்து அது வந்த கதையை ஆதியோடந்தமாகச் சொன்னார். வேறு யாரேனுமாக இருந்தால் அந்தச் சூழ்நிலையில் அவர்களே கைது செய்யப்பட்டிருப்பார்கள். அது தேசானந்தராக இருந்ததால் சப் இன்ஸ்பெக்டர் நம்பினார். பெட்டியைப் பிரித்துப் பார்த்தார். பிறகு தேசானந்தரிடம் ஒரு ரிப்போர்ட் எழுதி வாங்கிக் கொண்டார். ரிப்போர்ட் எழுதிக் கொடுத்த தேசானந்தர் சப் இன்ஸ்பெக்டர் கொண்டு வரச் சொன்ன காபியைக் குடித்து விட்டுப் பேச ஆரம்பித்தார்:—

"பாருங்கள்! எப்படியாவது இந்த நாட்டை ஒரு யோக்யமான நாடாக ஆக்கிவிட வேண்டுமென்று எல்லாத் தலைவர்களுமே ஆசைப்படுகிறார்கள். அங்கே, இங்கே மூலைமுடுக்கில் எவனாவது ஒரு அயோக்யன் தோன்றி நாட்டைக் கெடுத்து விடுகிறான். பெண்களைக் கெடுக்கும் ஒருவனைக் கண்டு புத்தி சொன்னேன். என் வார்த்தைகளினால் அவன் திருந்திவிட்டான். இந்தக் கள்ள நோட்டுக் காரனைக் கண்டாலும் பேசியே திருத்திவிடுவேன். ஆனால் அவன் என் கண்களுக்குப் படவில்லை."

—இப்படி அவர் சொன்னபோது. "அடடே, அவன் உங்களிடம் சொல்லிவிட்டே கள்ள நோட்டு அடித்திருக்கலாம்" என்பது போல மனதிற்குள் சிரித்துக்கொண்ட சப் இன்ஸ்பெக்டர், வெளிப்படையாக, "உண்மைதான், உண்மைதான்" என்றார். தேசானந்தர் மேலும் தொடர்ந்தார்:—

"எந்த ஒரு மனிதனும் இயற்கையிலேயே தவறு செய்யக் கூடியவனல்ல. தவறுகள் சில, இன்பமாக முடிவதைக் காணும்போது—தண்டனையில்லாமற் போகும்போது அதைக் காணும் மற்றவனுக்கும் அரிப்பு ஏற்படுகிறது. நீங்கள் எவ்வளவோ குற்றவாளிகளைக் கண்டிருப்பீர்கள். அவர்கள் எல்லோருமே ஏதாவது ஒரு அனுபவத்தால் தவறியவர்களாகவே இருந்திருப்பார்கள். ஆதலால், குற்றம் நேர்ந்த பிறகு திருத்துவதை விட அடிப்படையையே அணை போட்டு ஒழுங்காக்கவேண்டும். மனித சுபாவம் உணர்ச்சிகளுக்கு வளைந்து கொடுப்பது. உணர்ச்சிகளைச் சுற்றுச் சார்புதான் கிளறிவிடுகிறது. சுற்றுச் சார்புகள் அப்படி இருப்பதற்குச் சமுதாயம் முழுவதும் காரணம். சமுதாயத்தின் அந்த நிலைக்கு அரசாங்கம் காரணம். நான் சொன்னால் நீங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டீர்கள். நீங்கள் செய்யும் பணி அப்படிப் பட்டது. இந்த நாடு மட்டும் சுதந்திர நாடாக இருக்குமானால் எவ்வளவோ காரியங்களைச் சாதிக்க முடியும். ஐந்து வருட காலத்தில் உலகத்திற்கே இலக்கணமாய், இந்த நாட்டை ஆக்கி விட முடியும். இப்போது வேறு நாட்டான் ஆளுவதால் எதுவும் நம்மால் செய்ய முடிவதில்லை..."

—இப்படி பேசிக்கொண்டே போன தேசானந்தர் அந்த சப் இன்ஸ்பெக்டரையும் காங்கிரஸ் உருப்பினராக்கிவிட முயலுபவர் போல் காணப்பட்டார். அதற்கு மேல் அவரோடு பேசிக்கொண்டிருப்பது தன்னுடையவேலைக்கு ஆபத்து என்பதை அறிந்த சப் இன்ஸ்பெக்டர் அவரை எப்படியாவது அனுப்பிவிட முயன்றார்.

"சரி, வேறு என்னவிஷயம்!"-என்று பேச்சை வேறு பக்கம் திருப்பப் பார்த்தார்.

"நீங்கள்தான் சொல்லவேண்டும்!"—என்றார் தேசானந்தர்.

"இன்றைக்குக் கூட உள்ளூரில் ஒரு கள்ள நோட்டுக் காரனைப் பிடித்தேன். அவன் என்னமோ நல்ல பையன்தான். நம்ம மாசிலாமணிச் செட்டியார் மகன் எப்படியோ இந்தக் கள்ள நோட்டுக் காரியத்தில் ஈடுபட்டு விட்டான். எல்லாம் சேர்க்கை மோசம்தான்". என்றார் சப் இன்ஸ்பெக்டர்.

"எங்கே கை கொடுங்கள்" என்று அவர் கையைப் பிடித்துக் குலுக்கினார் தேசானந்தர். பிறகு "மாசிலாமணிச் செட்டியார் மகன் மாணிக்கமா இந்தக் காரியம் செய்தான்?" என்று கேட்டார். "ஆம்" என்று தலையசைத்தார் இன்ஸ்பெக்டர்.

அப்படியே போன பேச்சை பழையபடியும் தேச விடுதலைத் தண்டவாளத்திற்கே கொண்டு வந்துவிட்டார் தேசானந்தர். அதனால் பாதியில் பேச்சை நிறுத்தி, 'போய் வாருங்கள்' என்று கூறி விட்டார் சப் இன்ஸ்பெக்டர்.

வீட்டுக்கு வந்த தேசானந்தர் தான் அன்று செய்த நல்ல காரியத்தைப் பற்றி மனைவியிடம் பெருமையாகக் கூறினார். அதோடு மாசிலாமணிச் செட்டியார் மகன் மாணிக்கம் கைது செய்யப்பபட்டதையும் கூறினார். தூரத்தில் புகைப்படங்களைத் துடைத்து வைத்துக் கொண்டிருந்த அவரது தங்கை சரசுவின் காதில் இது விழுந்தது. அவசர அவசரமாக ஓடிவந்தாள். "யாரைக்கைது செய்தார்கள்?"-என்று பதறியபடி கேட்டாள்.

"நம்ம மாசிலாமணிச் செட்டியார் மகன் மாணிக்கத்தை!" என்று அமைதியாகப் பதில் சொன்னார் தேசானந்தர்.

சரசுவின் முகம் சிவந்தது. அவளை யறியாமல் கண்கள் நீரைக் கொட்டின. அந்த முக மாற்றத்தை தேசானந்தரும் கோமளமும் கண்டுகொள்ளக் கூடாது என்பதற்காக 'சடக்'கென்று திரும்பி உள்ளே போய் விட்டாள் சரசு. ஆனாலும் அவர்கள் அதைக் கவனித்துவிட்டார்கள். தேசானந்தர் குழம்பினார். மாணிக்கத்தைப் பற்றிச் சொன்னதும் சரசுவின் முகம் மாறுவானேன்?—அவருக்குப் புரியவில்லை.

தொடரும்

இன்பச் சுனை ! இலக்கியப் பூச்சரம் !

இலக்கியத் திங்களிதழ்

ஆசிரியர் :-

கண்ணதாசன்

நவம்பர் 16-ம் நாள்

(கார்த்திகை முதல் நாள்)

நாடெல்லாம் மணம் பரப்பும்

ஊருக்கு உபதேசம்

— 3-ம் பக்கத் தொடர்ச்சி —

பேசாமலிருக்கச் செய்தாய்?" என்று வினவினேன். அவன் சிரித்துவிட்டு, "அவரிடம் நீ பேசினையா?" என்றான். "ஆமாம், பேசினேன். அவர் மகள் பரிமளா இறந்துவிட்டாளாம்!" என்று அனுதாபத்துடன் சொன்னேன்.

'என்ன பரிமளா இறந்துவிட்டாளா?"

"ஆமாம் முருகா! எப்போது இறந்தாளோ......எப்படி இறந்தாளோ?"

முருகன் கலகலவென்று சிரித்தான்.

"ஏன் முருகா சிரிக்கிறாய்? உனக்கென்ன பைத்தியமா?"

"இல்லை யில்லை; உன் பேச்சுத்தான் என்னைப் பைத்தியக்காரனாக்கிவிடும் போல் தெரிகிறது!"

"நீ பேசுவது ஒன்றும் எனக்குப் புரியவில்லை!"

"சரி, எனக்குத் தூக்கம் வருகிறது" என்று கூறிவிட்டு அங்கிருந்த பெஞ்சுமீது துண்டை விரித்துப் படுத்தான் முருகன். கையில் வைத்திருந்த பையைத் தலைக்கு வைத்துக்கொண்டான். நானும் அவ்வாறே படுத்துக்கொண்டேன். நெடுநேரம் எனக்குத் தூக்கமே வரவில்லை.

முருகன் என்னைத் தட்டியெழுப்பியபோது தான் சிறிது நேரம் நான் கண்ணயர்ந்திருக்கிறேன் என்பதை உணர்ந்தேன்.

★

முருகன் என்னைவிட மூன்று வருடங்கள் மூத்தவனாக இருப்பான். சேலத்தில் உயர்நிலைப் பள்ளியில் நான் நான்காம் படிவம் பயின்றபோது, அவன் பள்ளி யிறுதி வகுப்புப் படித்துக்கொண் டிருந்தான். மதத்தின் பெயரால் சுயநலமிகள் பிரித்த சாதிப் பட்டியலில் தாழ்ந்த இனத்தைச் சேர்ந்தவன் முருகன். முருகன் மாணவர் கழகச் செயலாளனாக எனக்கு முன்பிருந்தவன். கூட்டத்தில் மிக நன்றாகப் பேசுவான். அவன் பேச்சைப் பாராட்டாதவர்கள், புகழாதவர்கள் பேச்சின் சுவையறியாத மரக்கட்டைகள்! வெகு விரைவிலேயே எனக்கு அவன் நண்பனானான். தன் படிப்பு முடிந்த பின்பும், அடிக்கடி என்னை அவன் சந்தித்தான். நான் பள்ளி இறுதி வகுப்பு முடித்தபோது, மேட்டூரில் அவன் ஆசிரியர் பயிற்சியை முடித்தான்.

சுதந்திர தின விழாவில் நரசிம்ம ஐயங்கார் எங்கள் பள்ளியில் பேசியபோது, முன்னாள் பள்ளி மாணவன் என்ற முறையில் முருகனும் பேசினான். மிகவும் அருமையாகப் பேசினான். ஐயங்காரின் பாராட்டுதலைப் பெற்றான்.

பெற்றோரின் விருப்பப்படி என் கல்லூரிப் படிப்பு திருப்பத்தூரில் தொடங்கலாயிற்று. ஆகையால், முருகனைச் சந்திக்கும் வாய்ப்பும், அவனைப் பற்றி அறியும் சந்தர்ப்பமும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. இப்போது அவனைச் சந்தித்தது, எனக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

★

இராணிப்பேட்டையில் நடைபெற்ற நண்பனின் திருமணத்தில் நானும் முருகனும் கலந்துகொண்டோம். மாலை வரை மணமகனுடன் அளவளாவிக்கொண் டிருந்து விட்டு, அவனிடம் விடை பெற்று ஊருக்குப் புறப்பட்டோம். வழியில் "என்ன முருகா, உனக்கு எப்போது திருமணம்?" என்று வினவினேன். "அதைப் பற்றிய பேச்செல்லாம் வீட்டில் வைத்துக் கொள்ளலாம்; இப்போது எதற்கு?" என்று அலட்சியமாகச் சொன்னான்.

ஆம்பூரி லிறங்கி, முருகனின் வீடடைந்தோம். அங்கே நான் கண்ட காட்சி......

எழிலோவியம் போன்ற குழந்தையை இடுப்பிலேந்தியவளாய், பரிமளா புன்சிரிப்புடன் எங்களை வரவேற்றாள்! ஆம்—நரசிம்ம ஐயங்காரின் மகள் பரிமளாதான்! அவர் வாயாலேயே 'செத்துப் போனாள்' என்று கூறப்பட்ட அதே பரிமளாதான், தங்கச் சிலை போலக் காட்சி தந்தாள். என் திகைப்பை, என் முகம் நோக்கி யறிந்துகொண்ட முருகன், "'இறந்து போனதாகக் கூறப்பட்ட பரிமளா இங்கு எப்படி வந்தாள்? நாம் காண்பது கனவோ?' என்று நினைக்கிறாயா வேணு! பரிமளா சாகவில்லை; அவள் என் மனைவி!" என்று கூறி என் முதுகைத் தட்டிக் கொடுத்தான்.

பரிமளா முகமலர்ச்சியுடன் பேசினாள். "இதோ பாரடா, மாமா!" என்று குழந்தைக்குச் சொல்லி, அவனை என்னிடம் தந்தாள். பையனுக்குப் "பெயரென்ன அம்மா?" என்றேன். "எழிலன்!" என்றாள். "பொருத்தமான பெயர்!" என்றேன். மழலைச் செல்வன் என்னை ஏறிட்டுப் பார்த்து நகைத்தான். களங்கமில்லாத அந்தச் சிரிப்பு என் இதயத்தைக் கொள்ளை கொண்டது. பரிமளா அடுக்களைக்குச் சென்றாள்.

"உங்கள் திருமணம் எப்படி நடந்தது முருகா? வழியில் இது பற்றி நீ ஒன்றும் சொல்லவில்லையே! என்னை வியப்பில் மூழ்கடிக்க வேண்டும் என்பதால் தானே நீ சொல்லவில்லை?" என்றேன். முருகன் புன்முறுவலுடன் "ஆம்" எனத் தலையசைத்தான். அவன் சொன்னான்:

"சுதந்திர தின விழாவில் நரசிம்ம ஐயங்கார் பேசினாரே உயர்நிலைப் பள்ளியில்; 'நான் பெருமைக்காகச் சொல்வதாக நினைக்கவேண்டாம்; என் மகள் சேரியில் வாழும் ஒருவனை விரும்பி மணந்து கொள்வதாகக் கூறினால், மகிழ்ச்சியுடன் அதற்கு நான் சம்மதிப்பேன் என்று'; நினைவிருக்கிறதா?"

"இருக்கிறது" என்றேன்.

"சேரியில் வாழும் முருகனைத் தன் மணாளனாகப் பரிமளா தேர்ந்தெடுத்திருப்பதை யறிந்ததும், அவள்மீது ஐயங்கார் வசைக் காவியம் பாடினார்; 'குலத்திற் கடுக்குமா கோடரிக் காம்பே!' என்றார். 'நீங்கள் தானே அப்பா மேடையில் முழக்கம் செய்தீர்கள்! இப்போது ஏன் என் விருப்பத்திற்குக் குறுக்கே நிற்கிறீர்கள்?' என்று துணிவுடன் பேசினாள் பரிமளா. சிக்கலில் அகப்பட்டுக் கொண்ட யாருக்குமே கோபமும் ஆத்திரமும் ஏற்படுவது இயல்பல்லவா! அவர் சினம், பரிமளாவின் கன்னத்தில் முத்திரையாகப் பதிந்தது!

"ஓராண்டுக் காலமாகப் பூத்து மணம் பரப்பிக் கொண்டிருந்த எங்கள் காதற் பூங்கொடியைப் பிய்த்தெறிய எந்தச் சக்தியாலும் முடியவில்லை. ஊருக்கு உபதேசம் செய்துவரும் ஐயங்காரைப் பொறுத்த வரை, அவர் மகள் பரிமளா இறந்து விட்டாள். இங்கே, அவள் குடும்ப விளக்காகத் திகழ்கிறாள்!"

பரிமளா சாப்பிட அழைத்தாள். உண்டபின், அங்கிருந்து ஊருக்குப் புறப்பட்டேன்.

★

மறுநாட் காலை வீட்டில் படுக்கையை விட்டு எழுந்ததும், அன்றைய செய்தித் தாளைப் புரட்டிப் பார்த்தேன். வியப்பால் என் கண்கள் விரிந்தன! கண்ணைக் கசக்கிக் கொண்டு, இன்னொரு முறை படித்தேன்; அதே செய்தி தான் தெரிந்தது:

"சென்னை ஒற்றைவாடை தியேட்டரில், பாரதியார் படிப்பக நிதிக்காக, தியாகி சேலம் நரசிம்ம ஐயங்கார் தலைமையில், 'ஊருக்கு உபதேசி' என்ற நாடகம் நடைபெறும்."

"மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்"

என்ற குறட்பா என் கவனத்திற்கு வந்தது. "ஊருக்கு உபதேசி!" என்று என் வாய் முணுமுணுத்தது! ★

—முல்லை வழுதி.

திருக்கோட்டியூர் தொகுதி

கிளைக் கழக செயலாளர்கட்கு

அன்புடையீர்,

நமது தொகுதிக்கு தேர்தல் செயற்குழு அமைக்கப்பட வேண்டியிருப்பதால், திருக்கோட்டியூர் தொகுதியில் உள்ள எல்லாக் கிளைக் கழகச் செயலாளர்களும், கிளைக் கழகம் இல்லாதஊர்களில் உள்ள மன்றங்கள், படிப்பகங்களின் பிரதிநிதிகளும், 18-11-56 ஞாயிறு மாலை 4 மணியளவில் திருப்புத்தூர் ராணி ஒலிபெருக்கி நிலையத்தில் நடைபெறும். ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்:
கா. காத்தமுத்து, திருப்புத்தூர்.
பெரி. அழகு, சிங்கம்புணரி.
மு. ந. அ. அழகு, காளாப்பூர்.
கரு. முனியாண்டி, திருக்கோட்டியூர்.

பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி

சித்த வைத்தியசாலை.

56 வருட அனுபவம் பெற்றது.

தீராத கொடிய வியாதிகளையெல்லாம் தீர்த்து பல்லாயிரக்கணக்கான நற்சாக்ஷிகள் பெற்று இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நிகரில்லாப் புகழ் பெற்றது.

பெண்களுக்கு ஓர் வரப்பிரசாதம்.

சூதக சம்மந்தமான சகல குற்றங்களும் நீங்கி புத்திர சந்தானம் உண்டாக பழநி ஆர். எம். கே. கெர்ப்ப சஞ்சீவி எண்ணை சாப்பிடுங்கள்.

பெண்களுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்றுவலியை அந்த க்ஷணமே நிறுத்தும். எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்ட சூதக வயிற்றுவலியும், சூதக சிக்கலும் இதில் அவசியம் தீரும். காலாகாலத்தில கிரமப்படி பஹிஷ்டையாகும். கெர்ப்ப பையிலுள்ள 6-வித குற்றமும் தீர்ந்து கெர்ப்ப உற்பத்தியை உண்டுபண்ணும். அனுபவத்தில் கைகண்டது. சூதகவயிற்றுவலி இருக்கும் வரை கெர்ப்பம் தரிக்காது. மேற்படி வலி தீர்ந்து கெர்ப்பம் தரிக்க வேண்டுமானால் பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி கெர்ப்ப சஞ்சீவி எண்ணை சாப்பிடுங்கள்.

தபால் செலவு உள்பட ரூ. 7-10-0.

தங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி! விபரமாய் எழுதுங்கள். கேட்லாக் இனாம்.

பிரதம வைத்தியர் & மானேஜர்:—சித்த வைத்தியக் களஞ்சியம் ஆர். எம். கே. சிவசுப்பிரமண்ய ஓம்.

ஆர். எம். கே. வேலுசுவாமி, சித்த வைத்தியசாலை.

தபால் பெட்டி நெ. 16, (டெலிபோன் நெ. 219) பழநி.

★★★★ தைமூரின் படைக்கும் துருக்கியப் படைக்கும் குஸ்துந்தினியாவில் நடைபெற்ற பெரும் போரில் தைமூரின் படை வெற்றிபெற்றது. துருக்கியச் சேனாதிபதி யஜ்தானி கைது செய்யப்பட்டு தைமூரின் சபா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டான். அப்போது ஒரு இளைஞன் தைமூரின் ராஜசபைக்கு கொண்டுவரப்படுகிறான்: அந்த வாலிபனின் வாழும் வேந்தன் தைமூரை வியப்பிலாழ்த்தியது. ★★★★

2

"யஜ்தானி! யாரவன்? இத்தனை யாண்டுகளாக என் செவிகளில் புகாத கடுமையான சொற்களை உதிர்க்கும் இந்தப் பிஞ்சு யார்?" தைமூரின் உடம்பெல்லாம் நரம்பு புடைத்து நின்றது. அவன் தொண்டை கோடையிடிபோல் முழங்கிற்று. விழியோட்டம் அக்கினிக் கணையாகத் தெரிந்தது. தலைவனின் தணியாத கோபம் கண்டு தாதாரியச் சபா மண்டபம் திகிலடைந்தது

"அவன் என்...மகன்!"

"மகன்! ஓஹோ! துருக்கி நாட்டுப் பிரதம சேனாதிபதியின் புத்திரன்!" – தைமூர் சிரித்தான். சிரிப்பா அது! மரணத்தின் கெடுபிடி! ஆணவத்தின் சிரசாட்டம்! திசை எட்டும் புகழ் சேர்த்து திரை பெற்றுக் கோலொச்சிய தைமூர், அவனது வாழ்நாளில் இவ்வளவு தூரம் பொறுமையாக இருந்ததில்லை. பல்லைக் கடிப்பது பழுத்த விழிகளை உருட்டுவதும் தைமூர் எதிரிக்குக் கொடுக்கப்போகும் தண்டனைக்கு ஒரு ஜாடைக் குறியாக இருந்து வந்திருக்கிறது. அருளில்லாமல் முகத்தை மாற்றிக்கொண்டு பொருளில்லாமல் சிரித்துவிட்டால் எதிரே நிற்பவனின் ஆயுள் கூடு விட்டுப் போய்க்கொண்டிருக்கிறது என்றுதான் பொருள்.

"யஜ்தானி!"

"பாதுஷா! அவன் பெயர் அபீப்!"

"பெயரை கேட்கவில்லை! பசலையின் நாக்குத் துடிப்பை வினவுகிறேன்" – தைமூர் ஆசனத்தை விட்டு எழுந்தான். மந்திரி பிரதானிகளின் முகமெல்லாம் பேய்பிடித்தது போலாயிற்று. மெல்லச் சிரித்து முடமாயிப்போன காலை அணைத்துக்கொண்டு பொன்முலாம் பூசிய படிக்கட்டுகளை விட்டு இறங்கினான். ஆள் அரவம் கண்ட புறக்கூட்டத்தைப்போல தைமூரின் ராஜசபை வெறித்து இருந்தது.

"யஜ்தானி! தந்தையும் புத்திரனுமாகச் சேர்ந்து தார்த்தாரியரை மிருகங்களுக்கு ஒப்பிடுகிறீர்கள்! இல்லையா!"

"அப்படியா சொன்னோம்!"-யஜ்தானி பணிவாகச் சொன்னாலும் பல்லாயிரக்கணக்கான துருக்கிய வீரர்களின் சக்தியனைத்தும்திரண்டு அவனது விழிகளிலே கூடுகட்டி நின்றது.

"துருக்கியச் சேனாதிபதி என்ன பொருள் கொண்டு சொல்லியிருந்தாலும், பாதுஷா அதற்குக் கொண்டிருக்கும் பொருள்தான் மெத்தச்சரி என்று நினைக்கிறேன்" என்று அபீப் குறுக்கிட்டான்.

தைமூரின் விழிகளிலே தீப்பொறி பறந்தது. 'அபீப்!' என்று கூவினான்.

"தைமூர் கொடூரமானவனல்ல; ரத்தவெறி பிடித்தவனல்ல; அரக்க சுபாவம் கொண்டவனுமல்ல!"

"இம்சையின் துடி துடிப்பை இசைவாணியின் ஒலி அலைகளாகக் கருதுவோரைத் துருக்கியர்கள் அப்படித்தான் அழைப்பார்கள் பாதுஷா!"

அபீபின் துணிச்சலான பேச்சை அவன் தந்தை யஜ்தானி விரும்பவில்லை. அடிக்கடி அபீபை அவன் பார்த்துக்கொண்டே இருந்தான். அந்தப் பார்வையிலே வெறுப்பு இருந்தது. அதிருப்தி கலந்திருந்தது.

"வாழ்வு அஸ்தமனமாகுமுன் வாய்ஜாலத்தைக் காட்டிவிட நினைப்பதிலே துருக்கியர்கள் கைதேர்ந்தவர்கள். யஜ்தானி! அபீப்! உண்டு களித்து உறங்கத்தான் அல்லா என்னைப் படைத்தார் என்பதை நான் எதிர்க்கிறவன். ஆண்டவன் எனக்குச் சக்தியளிக்கவில்லையே என்று கொதித்தெழுவதைக் காட்டிலும், பெற்றிருக்கும் சக்தியை மூடிவைக்கும் முதுகெலும்பற்றவர்களைத்தான் நான் நாஸ்திகன் என்று அழைப்பேன். அபீப்! தைமூரின் தத்துவம் மகேஸ்வரனின் சக்தியை உலகெங்கும் ஒளி மயமாக்கும் தத்துவம்!" – தைமூரின் இந்த வியாக்யானத்தைக் கேட்ட அபீப் கைகளை முறுக்கிக்கொண்டு கடிவாளத்தின் இழுப்புக்கும் அடங்காத காட்டுக்குதிரைபோல தைமூருக்கு அருகே வந்துவிட்டான்.

"தொண்டினைத் தவிர வேறு எவருக்கும் தொல்லைகள் தந்திராத துருக்கியத் துருப்புக்களைத் துவைத்துத் துவைத்துச் சாகடிக்கத்தான் உங்களின் இஸ்லாம் மதம் போதிக்கிறதா? பாதுஷா...!" – அபீப் குதித்துக் குதித்துப் பேசினான்.

சபையிலே நிசப்தம் நிலவியது. யஜ்தானி தைமூரை இரக்கப் பொருளோடு பார்த்தான். அந்தப் பார்வை 'அபீப் இளைஞன்! உலகத்தைப் பற்றியும் உங்களைப் பற்றியும் புரிந்துகொள்ளாதவன். மன்னித்துவிடுங்கள் அவனை' என்று பாதுஷாவிடம் மண்டியிட்டுக் கேட்பதுபோலிருந்தது.

தைமூர் ஏனோ சிரித்தான். அவன் முகத்திலே படர்ந்திருந்த கோபக் குறிகள் அழிந்துகொண்டு வந்தன. வாலிபனின் சொற்கேட்டு வெகுண்டெழுந்ததின் விளைவாக வெட்டுப்பட்டதுபோல் தோன்றிய அவனது கருவிழிகள் ஒன்றுசேர்ந்தன.

அபீப் மீண்டும் பேசத்தொடங்கினான். தைமூர் அபீப்பை வியப்போடும் ஆசையோடும் நோக்க ஆரம்பித்தான்.

"பாதுஷா! அல்லாவுக்கும் உங்களுக்கும் உள்ள உறவை இஸ்லாமியர்கள் ஒருபோதும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். வாளும் வைரநெஞ்சமும் முசல்மான்களல்லாத மானிட ஜாதியை புதைகுழிக்கனுப் பத்தான் என்பதை எந்த முசல்மான் ஏற்றுக்கொள்வான். சக்தியும் செல்வாக்குமிருந்தால், அதைக் கட்டிக் காப்பதுதான் மேன்மைக்குரிய அல்லாவின் மேதா விலாசத்தை அவரது அடியார்கள் உலகுக்குப் பரப்பியதாகும் என்கிறேன் நான். குரோதம் பாராட்டியவர்களைக் கொலைசெய்து அவர்களின் குருதியோட்டத்தில் உமது குதிரைகளின் குளம்படிகளை நனைத்து மகிழ்வதுதான் அல்லாவுக்குச் சேவை என்கிறீர் நீர்! பாதுஷா! அகண்ட கடலுக்கப்பாலிருக்கும் ஐரோப்பாக்கண்டம் இஸ்லாமை வரவேற்க இரு கையேந்தி நிற்கிறது; சோபியாவின் மாதா கோயிலில் 'அல்லாஹூ-அக்பர்' என்ற வேதஒலி பரிணமித்து வருகிறது; இல்லந்தோறும் நாட்டவரின் உள்ளந்தோறும் இஸ்லாத்தின் நல்ல தத்துவங்கள் மின்னிக் கொண்டிருக்கின்றன; இவைகளையெல்லாம் சிதைத்துத் தூளாக்குவதுதான் நீங்கள் அல்லாவுக்குச் செய்யும் புனிதத் தொண்டா?"

தைமூர் தலைகவிழ்த்து நின்றான். அவன் உருட்டி மகிழ்ந்த குறுநில மன்னர்களின் ரத்தினக் கிரீடங்கள் அவன் உள்ளத்திரையில் கலகலவென ஓசைகிளப்பி ஓடின. சாகடிக்கப்பட்ட சைன்ய வரிசைகள் எலும்புக்கூடுகளாக அணிவகுத்து நிற்பதுபோல் அவனுக்குத் தோன்றியது. போரிலே புருஷனைப் பறிகொடுத்தோரும், புத்திரனை இழந்தோரும், தம்பியைப் பிரிந்தோரும், தனயனைக் கொடுத்தோரும் புலம்பியழும் மயானத்துக் குரல்களெல்லாம் ஒன்றுசேர்ந்து அவன் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவதாகவே ஒருகணம் எண்ணிவிட்டான். ஆகாயமே அதிர்ந்தாலும் கொஞ்சமும்யோசிக்காத தைமூர், பூமியே வெடித்தாலும் போட்டிக்காகத் தன் வாயைப் பிளந்து காட்டும் மனவலிமை பெற்றிருந்த தைமூர், சாமற்கண்டில் இருந்துகொண்டே உலகத்தைச் சுகம் விசாரிக்கும் உரிமை பெற்றிருந்த மலைத்தோள் மனிதன், இளைஞன் அபீபுக்கு எதிரே அன்று சுருண்டுபோனான். கோபம் பீறிட்டெழ வேண்டிய இடத்தில் குழைவு காட்டினான்; தலையைக் கொய்து பந்தாட வேண்டிய தருணத்தில் தயவு சிந்த முகத்தை மாற்றிக்கொண்டான்.

களத்திலே புலியாகும் துருக்கியச் சேனாதிபதி யஜ்தானி, தைமூரின் மூலஸ்தானத்தில் பேதலித்துவிட்டான். பெற்ற மகன் அபீப் பேரரசைத் திணறடிக்க வைத்து வேடிக்கை பார்ப்பது யஜ்தானிக்கு பெருத்த கவலையை வளர்த்துக் கொண்டு வந்தது.

"மகாராஜா! அபீபுக்குக் கொஞ்சம் பைத்தியம்! முறைதவறிப் பேசிவிடுவான். பொறுத்தருளக் கேட்டுக்கொள்கிறேன்." என்று வேண்டிக் கேட்டுக்கொண்டான் யஜ்தானி.

யஜ்தானியின் வேண்டுகோள் தைமூரின் செவிகளில் புகவில்லை. மகா சமுத்திரத்தின் பேரலைகளென அடித்து ஓய்ந்த அபீபின் கீச்சுக் குரல் மட்டுமே தைமூரின் கர்ண பேரிகையில் ஊர்ந்து கொண்டு இருந்தது. நிற்கதியற்றவனாய் வனாந்திரங்களிலே அலைந்தானே ஒரு காலத்தில் தைமூர், அப்போதுகூட இப்பேர்ப்பட்ட சொற்களை அவன் கேட்டதில்லை. பலாட்டியர்களாக விளங்கிய பாதுஷாக்கள், படைபலம்கொண்ட சக்கரவர்த்திகள் உச்சரிக்க முடியாத தடிப்புள்ள சொற்றொடர்களை தைமூர் அன்று தான் முதன் முதலாகக் கேட்டான். பணிவுகாட்டிப் பாதசேவை செய்து வரும் தன் சொந்தச் சிப்பந்திகளின் மத்தியிலே நின்று அபீபின் திறமையான வாதத்தை அனுபவித்தான். பொய்யைப் பெருக்கிக் கூட்டிக் கழித்து ஈவுத் தொகையை மெய்யாக்கும் சித்தாந்தத்தின் தந்தையான தைமூர், வாலிபனும் அபீபின் வாய்மொழிக்கு முன்னே சரணடைந்துவிட்டான். கஜபலத்திற்கீடான புஜபலம் பெற்ற அவன் ஆட்பெரும் படைகளுக்கிடையே வெறுங்கூடாக நின்றான்.

வெறித்தனத்தின் கிழட்டுக் காலம் விவேகத்தின் காலடியிலே சாய்ந்துவிடும் என்று தைமூர் அன்று பாடம் கற்றுக்கொண்டான் என்றுதான் சொல்லவேண்டும்.

சிறை வழிந்தோட அடைபட்டுக் கிடந்த துருக்கியச் சேனாவீரர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். கைப்பற்றப்பட்ட அவர்களின் சொத்துக்கள் திருப்பிக்கொடுக்கப்பட்டன.

சபை கலைந்தது. தைமூரின் பெருமதிப்பைப் பெற்றிருந்த பிரமுகர்கள், அனைவரும் அடுத்தவர் எவருடனும் பேசாமல் அவ்வளவு மௌனமாகத் திரும்பினார்கள். அவர்களின் விழிகளிலே சந்தேகமும் ஆச்சரியமும் உலா வந்து கொண்டிருந்தன. தைமூர் அடித்து வைத்த சிலைபோல் அதே இடத்தில் ஒற்றைக்காலால் நின்றான். அபீபும் யஜ்தானியும் விரோதிகளைப்போல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நின்றனர். அந்தக் காட்சியைப் பார்த்துவிட்டு தைமூர் விட்ட ஒரு பெருமூச்சு அந்தப் பளிங்கு மண்டபத்தையே ஒருமுறை திக்கு முக்காடச் செய்துவிட்டது.

"வெறுத்து ஒதுக்கவேண்டிய சிறுபிள்ளைத்தனத்திற்கு, தியஎண்ணங்களை அறுத்தெரியும் சக்தியும் இருக்கத்தான் செய்கிறது. அபீப், கற்றறிந்தோரின் கோழைத்தனம் எத்தனை தைமூர்களை விட்டு வைக்கப் போகிறதோ தெரியவில்லை. என்னுடைய வாழ்நாளில் பத்தாண்டுகளுக்கு முன்பே ஒரு அபீபைப் பார்த்திருந்தால், அவனோடு பேசிப் பழகியிருந்தால் இன்று என்னைப் பற்றிக் கணக்கிட்டிருக்கும் ராஜ்யாதிபதிகளின் நெஞ்சங்களிலே நான் மணம்வீசும் பொன் மலராக இடம்பெற்றிருப்பேன்; வணக்கத்திற்குரிய விக்ரகமாக ஆட்சி செய்துகொண்டிருக்க முடியும் என்னால்!"

தென்னரசு

"இப்போது மட்டுமென்ன? பாதுஷாவை எதிர்க்க வல்லவர் எவர் இருக்கிறார்கள்!"–யஜ்தானி குறுக்கிட்டான்.

"இப்போது என்ன?...அடங்கிக் கிடக்கிறார்கள்! அன்பாகவா இருக்கிறார்கள்? முகத்தைக் கோணலாக்கிக் கொண்டால் முகமூடியைக் கழற்றிக்கொள்வானே என்...

★ 11ம் பக்கம்

தைமூரின் காதலி

— 10-ம் பக்கத் தொடர்ச்சி —

அஞ்சியல்லவா மௌனியாக இருக்கிருர்கள்! அடங்கிக் கிடப்போரால் ஆபத்து எப்போது விளையுமென்று சொல்லமுடியாது! கண்ணில் எண்ணையை ஊற்றிக்கொண்டு எத்தனை நாளைக்கு இருக்க முடியும்!......தைமூர் தேற்றுவாரில்லாமல் மிருகமாகிவிட்டான்!...கோழைகள்! நெஞ்செலும்பொடிந்தவர்கள்! ஆடி ஆடி என்னை மகிழ்வித்து பொன் பெற்றுப்போனுர்கள்! பாடிப் பாடி பரவசத்திலாழ்த்தி பண முடிப்பு வாங்கிச் சென்ருர்கள்! சாத்திரம் கற்றேன், சூத்திரம் பயின்றேன் என்று வீராப்புப் பேசுகிறவன் எவன் வந்தான் என்னிடம்? என்ன சொன்ஞன்! பாதுஷா உமது பாதை தவறு என்று சொன்னவன் யார்! அத்தனையும் முகஸ்துதிக்காரர்கள்! முகஸ்துதிக் காரர்கள்!''-என்று தாஞகப் பேசிக்கொண்டிருந்த தைமூர், பாம்பின் பிடியிலிருந்து எப்படியோ தப்பி விட்ட தவளைபோல தத்திக்கொண்டே அபீபின் பக்கம் வந்தான். யஜ்தானி தைமூருக்கும் அபீபுக்கும் இடையிலே தனது கரத்தை நீட்டிஞன். தைமூருக்கு ஒன்றும் புரியவில்லை. அப்போது கோட்டைக்காவலன் ஓடிவந்து கோட்டை வாசலிலே ஒருகோஷாப் பெண் கண்கலங்கி நிற்பதாகச் சொன்ஞன்.

''கோஷாப் பெண்! யாரவள்! இல்லத்தில் அடைபட்டுக் கிடக்க வேண்டிய அவள் இங்கு ஏன் வந்தாள்?'' - தைமூர் கோட்டைக் காவலன்மீது எரிந்துவிழுந்தான்.

''துருக்கியப் பெண்ணும்!''-காவலன் பயந்து கொண்டே சொன்ஞன்.

''ஓஹோ! மாங்கல்யப் பிச்சை கேட்க வந்திருக்கிருளோ!''என்று சொல்லி இடி இடியெனச் சிரித்தான் தைமூர். சரிவான தகரத் தாழ்வாரத்தில் கருங்கல் துண்டு உருண்டு வருவதுபோல் ஒலித்தது அவனது வெறிச்சிரிப்பு.

''பாதுஷா!!'' - அபீப் பல்லைக் கடித்துக்கொண்டு உறக்கக் கூவிஞன்.

தைமூரின் மின்னல் விழிகளில் ஒளி மங்கிவிட்டது. காணுமற் போன பொருளை எண்ணி அழுதுகொண்டிருக்கும்போது அப்பொருள் கிடைத்துவிட்டது என்ருலும் உடனடியாகக் கண்ணீர் அடைபட்டு விடுவதில்லை. கண்ணீரும் குமிழ் சிரிப்பும் ஒரே முகத்தில் ஆடிக்கொண்டிருக்கும். அது போலத் தோற்றமெடுத்தது தைமூரின் கொடூர முகம். தைமூர் தோல்வி மனப்பான்மையோடு ராஜசபையை ஒருமுறை சுற்று முற்றும் பார்த்தான். முற்றிக் காய்ந்த சுரைக்கூட்டுக்குள் உதிர்ந்து கிடக்கும் விதைகளைப்போல். வெரிச்சென்றிருந்த சபையில் பாரசீகத்துப் பளிங்குப் பதுமைகள்-தூண்களில் தொங்கிக்கொண்டிருந்தன.

''யஜ்தானி! உம்முடைய அபீபோடு பேச என்ஞல் முடியவில்லை! அவனுடைய வாதங்கள் என்னை எங்கெங்கோ இழுத்துக்கொண்டு போகின்றன. கொஞ்சநேரத்திற்குள் இரண்டு தைமூர்களைப் பார்த்துவிட்டீர்கள்! இந்தியாவிலிருந்து கருங்கடல்வரை இறுமாப்புடன் வலம் வந்த தைமூரை, கணிவுக்கும் கண்ணீருக்கும் நியாயத்திற்கும் நேர்மைக்கும்மனங்கசியும் தைமூராக மாற்ற அபீப் ஒருவஞல்தான் முடியும் யஜ்தானி! அவனுக்கு எதிரேயே திடீர் என்று பழைய தைமூராக மாறிவிடுகிறேன்! அபீப் நெருப்பு! உலகத் தவருக்கல்ல! அவர்களுக்கு அவன் பனிக்கட்டி! என்னை மட்டும் வேக வைக்கும் 'மாயக்கனல்'! அவன் விலகிப்போனுல் இளகியிருக்கும் ஈயரசம் இறுகி விடுவது போல் என்மனம் கல்லாகிவிடும். நான் தைமூராகி விடுவேன். ஆம்; மானிடரே உலகத்தில் இருக்கக் கூடாது என்று எண்ணும் மனித மிருகமாகிவிடுவேன். யஜ்தானி! உலகத்தின் நலனுக்காக வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்; அபீப் என் சபையில் இருக்கட்டும்! இந்தத் தைமூரை மனிதனுக மாற்றிவைக்க அவன் உதவட்டும்! விரியன்பாம்பின் விஷப்பற்களைப் பிடிங்கி எறிந்துவிட்டு வர்ணஜாலத் தோல் கயிறு என்று என்னை கழுத்தில் பின்னிக்கொள்ள அவனுல்தான் முடியும் யஜ்தானி!''

யஜ்தானிக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. தொண்டைக்கு அடங்காத பெரும்பொருளை விழுங்குவதுபோல அவன் வெறும் வாயை விழுங்கிஞன். அவனது கடைவிழிகள் அபீபை நோக்கின. அபீபின் கண்களில் நீர்துளித்து நின்றது.

தைமூர் இவர்களைப் பார்க்கவில்லை. மெல்லிய சந்தன வர்ணத் துணியால் உடல் முழுதும் மூடப்பெற்ற மந்திரப் பதுமை நடந்து வருவதுபோல சபையை நோக்கி நகர்ந்து வந்த கோஷாவைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

(தொடரும்)



ஒப்புயர்வு கொண்ட நாவல்

கிடைக்குமிடம் :

மலர் நிலையம்

133, பிராட்வே, சென்னை - 1.

புன்னகையும் கண்ணீரும்!

அந்தி வானத்திலே ஆதவன் மறைந்துவிட்டான். அடிவானத்தின் விளிம்பிலிருந்து தோன்றிய முழு நிலவு தண்ணொளியைப் பசுமைநிறைப் பூஞ்சோலையிலே வீசி மகிழ்ந்தது. நான் அங்கு ஒரு மரத்தடியில் அமர்ந்து அதை ரசித்துக்கொண்டிருந்தேன். கிளைகளினூடே நீலப்பட்டாடை விரித்த விதானத்திலே வாரி இறைக்கப்பட்ட வெள்ளிக்காசுகளைப் போன்ற நட்சத்திரக் கூட்டத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்தேன். தூரத்திலுள்ள குன்றுகளினின்றும் ஓடையின் சலசலக்கும் ஒலி என் காதில் வந்து விழுந்தது.

சிங்காரப் பண் இசைக்கும் பறவைகள் கூடு சேர்ந்தன. வண்ணமலர்கள் தங்கள் மெல்லிய இதழ்களை மூடிக்கொண்டன. அமைதி ஆட்சி செலுத்தியது அங்கே. மெல்லிய காலடியின் ஓசை பசும் புற்றரையிலிருந்து வந்து என் காதில் விழுந்தது. இளங் காதலரிருவர் ஒரு மரநிழலில் அமர்வதைக் கண்டேன்.

இளைஞன் சுற்றிலும் பார்த்துவிட்டு அவளைப் பார்த்து, ''அன்பே! அருகில் வந்து உட்கார்! நான் சொல்வதையெல்லாம் கேள்! உனது புன்னகையிலே உலகின் மகிழ்ச்சியைக் காண்கிறேன், சிரித்து மகிழ்! நாளெல்லாம் நமக்கே சொந்தம். இருந்தும் உன் இதயம் சந்தேகப்படுகிறதென்று என் ஜீவன் உணர்கிறது. காதல் பாதையிலே சந்தேகம் ஒரு பெரு நோய்.

வருங்காலத்தில் நிலவொளி வீசும் இந்தப் பெரு நிலப்பரப்பின் மகராணி நீதான், பேரரசர்களின் பெரு மாளிகையை ஒத்த இம்மாளிகைக்கு நீதான் அரசி. இன்பமாகப் பொழுதுபோக்கும் இடங்களுக்கு நீ செல்ல எனது உயர்ந்த ஜாதிக்குதிரைகளும், குதிரை பூட்டிய சிறந்த வண்டிகளும் காத்துக்கிடக்கின்றன. உன் புன்னகை-எனது பொக்கிஷத்தின் தங்கமனைத்தும் அதற்கு ஈடாகாது! உன் பார்வைக்கு என் தந்தையின் வைரக்குவியல்கள் இணையாகா! அன்பே! என் இதயத்தின் ரகசியத்தை எல்லாம் கேள். நமது இன்பத்திற்குக் காலம் காத்துக்கிடக்கிறது. நீல நதிக்கரையிலுள்ள மாளிகைகளிலே பொழுதைக் கழிபபோம். அங்கே இளவரசிகளையும், பிரபுக்களின் குமரிகளையும், நீ காண்பாய். உனது பட்டாடைகளையும், வைர அணிமணிகளையும் கண்டு அவர்கள் பொருமைப்படுவார்கள். இவையெல்லாம் உனக்கும் பெருமையைத் தரும். ஆ! உன் புன்னகையைக் காணும்போது என் இதயம் பெரு மகிழ்வுகொள்கிறது. என் வாழ்வே உன் புன்னகையில்தான் இருக்கிறது.''

கொஞ்சநேரம் சென்றதும் அவர்கள் அங்கேயிருந்து சென்ருர்கள். அவர்களின் காலடியில் மென்மலர்கள் சிக்கிச் சிதைந்தன. அப்போது செல்வர்களின் காலடியில் சிக்கிச் சிதையும் ஏழைகளின் இதயங்கள் என் நினைவுக்கு வந்தன. என் பார்வையிலிருந்து அவர்கள் மறைந்தனர்.

காதலில்கூடச் செல்வத்துக்கு உள்ள இடத்தை எண்ணினேன். செல்வம்-மனிதனின் தீயகுணங்களுக்குக் காரணம்! காதல்-இன்பம், மகிழ்ச்சி, நம்பிக்கை ஒளி இவற்றுக்கு ஊற்று!

நினைவலைகளிலே நான் ஆழ்ந்துவிட்டேன்! இரு உருவங்கள் என்னைத் தாண்டிச் சென்றன. சென்று புற்றரையிலே அமர்ந்தனர். அவர்கள்-வயல்களின் ஓரத்திலேயுள்ள பாட்டாளிகளின் குடிசையிலிருந்து வந்த ஒரு ஆணும்-பெண்ணும்.

சில விஞடி அமைதிக்குப்பின் சோகம் கலந்த குரலில் பெருமூச்சுக்கிடையே அவன் பேசிஞன்.

''என் அன்பே! கண்களில் வழியும் நீரைத்துடைத்துக்கோள்! நம் கண்களைத் திறந்துவிட்ட காதல், நமக்குப் பொறுமையையும், எதையும் தாங்கும் இதயத்தையும் தரும். கண்ணே! கண்ணீரைத் துடைத்துக்கொண்டு இதயத்தைத் தேற்றிக்கோள்! நாம் காதலிக்கிருேம்! அந்தப் புனிதமான காதலுக்காக வறுமையின் சித்ரவதை, துரதிருஷ்டத்தின் கொடுமை, பிரிவின்துயரம்,-இவற்றைத் தாங்கிக்கொள்வோம்.

உனது மனம் மகிழ, கண் மருள, கைநிறையத் தங்கத்தை அள்ளி அள்ளிக் கொடுக்கும்வரை-அதைச் சேர்க்கும்வரை-காலத்தோடு போராடுவேன்.

காதல் தெய்வத்திற்கு நமது கண்ணீரையும், பெருமூச்சையும் காணிக்கையாக்குவோம். அதற்கான பயனை-நாம் அடைய வேண்டியதை நிச்சயம் பெறுவோம்.

சென்றுவருகிறேன் என்று செல்வமே! நிலவின் ஒளி தேய்கிறது! காலம் சிறகடித்துப் பறக்கிறது!''

விம்மலுக்கிடையே மெல்லிய குரலொன்றைக் கேட்டேன். ஆம்! காதலுக்காக ஏங்கும் அக்கன்னிப் பெண்ணின் குரல்தான். பிரிவின் துயரம், பொறுமையின் மகிழ்வு இவை கலந்த குரலிலே ''அன்பே! சென்று வருக,'' என்ருள்.

அவர்கள் பிரிந்து சென்றனர். மரத்தடியிலே எவ்வளவு நேரம் இருந்தேனே எனக்கே தெரியாது.

இயற்கையின் மோனத்திலே லயித்திருந்த நான், ஆழங் காணமுடியாத, முடிவற்ற ஒப்புயர்வற்ற பொருள் ஒன்றைக் கண்டேன். அது - தங்கத்தால் பெறமுடியாதது; வைரத்தால் வாங்கமுடியாதது; சோகத்தாலும், கண்ணீராலும் அழிக்க முடியாதது; இள்வேனிற் காலத்திலே பூத்துக் குலுங்குவது; ஓடையின் சலசலப்பிலே, தென்றலின் மென்மையிலே கலந்திருப்பது-ஆம்! அதுதான் காதல்.

காதல்-செல்வர்களுக்குப் புன்னகை!
காதல்-ஏழைகளுக்குக் கண்ணீர்!

—சிந்தாமணி

உலகம் பலவிதம்

தேர்தலில் முன்னேற்றக் கழகம் கலந்துகொள்ளப்போவதாக அறிவித்ததிலிருந்து, காங்கிரஸ் வட்டாரமும் கம்யூனிஸ்ட் வட்டாரமும் திராவிட கழக வட்டாரமும் 'கால்ரா'ப் பிரதேசங்களாக மாறியிருக்கின்றன!

அர்த்தராத்திரியில் காமராசர், திடீரென விழிக்கிறார்!

பாதித் தூக்கத்தில் 'பத்துலட்சம்' புரண்டு படுக்கிறார்!

சுப்பிரமணியம் விழித்துக் கொண்டே உளறுகிறார்!

பெரியார் 'புது அகராதி' தயார் செய்கிறார்!

அந்த அகராதிக்கு வார்த்தைகளைப் பொறுக்கி, குருசாமி கொடுக்கிறார்!

ஜீவானந்தம் ஏண்டால் எடுக்கிறார்!

கம்யூனிஸ்ட்டுக் கட்சி சுதியில்லாமல் பாடுகிறது!

கழகமோ, எப்பொழுதும்போல் தொண்டாற்றி வருகிறது!

கழகத்தின் வார்த்தைகள் வெறும் வாணவேடிக்கைகளல்ல என்பதற்கு இவையே அத்தாட்சி! குறி வைத்துச் சுடுகிறோம். குருவிகள் கூட்டம் கூட்டமாக விழுகின்றன! கழுகுகள் கணக்கில்லாமல் விழுகின்றன!

கதறிக்கொண்டே விழுகின்றன!

வெண்டைக்காயை விளக்கெண்ணெயில் தோய்த்து வெண்ணெயில் போட்டுப் புரட்டி எடுத்து, பட்டாக் கத்தியால் படாரென வெட்டும் சூராதிசூரர்கள், நாற்றத்தில் கையைத் தோய்த்து, நம் மூக்குக்கு முன்னே நீட்டுகிறார்கள்!

லம்பாடிகள் சண்டை போடும்போது உபயோகப்படுத்தும் வார்த்தைகளையும் இந்த நாகரிகப் பிராணிகள் பயன்படுத்திப் பார்க்கின்றன!

"தேவடியாள் மக்கள்!"

"கண்ணீர்த்துளிக் கூட்டம்"

"திருடர்கள்!"

—இப்படி ஆயிரம்! எடுத்தெடுத்துச் சொல்லச் சொல்ல வளரும்!

இவ்வளவு திட்டியும்.....குதிரையைக் கொல்ல முடியவில்லை... கழுதைகள் குதிரைகளாகவில்லை!

வாழ்க! வெண்மூக்குப் புரவிகள்; முட்டிதட்ட வாழ்க!

☆ ☆ ☆

திருச்சியில் ஒரு பொதுக்கூட்டம்! காமராசர் பேசினாராம்! அவர் பேசக்கூடவா செய்கிறார் என்று யாரும் ஆச்சரியப்பட வேண்டாம். காலையில் போய் திருச்சியில் இறங்கியதும், மூன்றுமணி நேரம் தனியாக இருந்து பாடம் செய்தாராம்! அதனால்தான் முக்கிமுனகி, திக்கித் திணறி, விக்கி விம்மி, முப்பத்து மூன்றே காலரைக்கால் வார்த்தைகளைக் கொட்டிவிட்டு, வழிந்த மூக்கையும் வியர்வையையும் துடைத்துக்கொள்ள அவரால் முடிந்ததென்று காங்கிரஸ்காரர்கள் சொல்கிறார்கள்! ஆகா என்ன பேச்சு! என்ன பேச்சு! அந்தப் பேச்சைப் பற்றிக் கேட்ட பிறகுதான், நம்முடைய தலை எழுத்து எவ்வளவு உறுதி, நம்முடைய ஆயுள் எவ்வளவு 'கெட்டி' என்பதெல்லாம் எனக்குத்தெரியவந்தது! தமிழ்ப்புலவர்கள் பலபேர் அவருடைய பேச்சைக் கேட்டார்களாம்! அவர்களெல்லாம் திரும்பிப் போகும்போது உயிரோடு போனார்கள் என்பதிலிருந்துதான். 'ஆயுள்' பற்றிய ஐயம் எனக்கு நீங்கிற்று! இலக்கணத்தைக் கொன்றால் புலவனும் இறந்து விடுவான் - காமராசர் பேச்சைக் கேட்டும் இறக்கவில்லையே! வாழ்க தமிழ்ப் படுகொலை!

ஒருவர் சொன்னார்: "காமராசர் பேச்சு குழந்தையின் மழலைபோல இருந்தது"-என்று.

இருக்காதா பின்னே? பெரியார் பேச்சுக்கூட அப்படித் தானே இருக்கிறது! வயது ஏற ஏற, சிலருக்கு உள்ள புத்தியும் கெட்டு, குழந்தைப் புத்தி வந்துவிடுகிறது. சோற்றுக்கும் சேற்றுக்கும் வித்தியாசம் தெரியாமல் போய்விடுகிறது! காமராசர் விஷயத்தில் வெகு காலமாகவே இப்படித்தான்!

உண்மையில் அவர்மீது எனக்குப் பரிதாபமே ஏற்படுகிறது. பாவம்! கட்சியில் இருந்துகொண்டு, ஆள் பிடிக்கும் வேலையையும் சட்டை மாட்டும் வேலையையும் ஒழுங்காகச் செய்துகொண்டிருந்த அவரை, அவருக்குப் பழக்கமில்லாத மந்திரி வேலையில் கொண்டுபோய்ப் போட்டு, பத்துப் பேரால் தாக்கப்படும் வாய்ப்பை அவருக்கு அளித்துவிட்டார்களே, பாவிகள்! இந்தக் காங்கிரஸ்காரர்கள் மிகவும் பொல்லாதவர்கள். காமராசரைக் கழுத்தறுப்பதற்கென்றே முதன் மந்திரியாக்கியிருக்கிறார்கள். என்ன அநியாயம் பாருங்கள்! தினசரிப் பத்திரிகையைக்கூட வேறொருவர் படித்தால்தான் அவருக்குப் புரியும் என்னும்போது, எந்த 'பைலை'ப் புரட்டி, அவர் என்ன செய்யப்போகிறார்?

ஏதோ, எந்த ஊருக்காவது கடிதம் எழுதி அந்த ஊரிலே கூட்டம் போடச்செய்து, சொந்தமாக ரெண்டு வார்த்தையும் இரவலாக ஒரு ஏழு வார்த்தையும் பேசவாவது செய்கிறார். அவர் வாயிலிருந்து வார்த்தை வரும் அழகை நீங்கள் பார்த்திருக்கமாட்டீர்கள். வார்த்தைகளைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவார். அடம் பிடிக்கும் பையனைப்போல, அது தொண்டையிலேயே நிற்கும். பிறகு விக்கும். கடைசியில் அவரது வாய் அந்த வார்த்தைகளைக் கக்கும் அணுகுண்டு கண்டுபிடித்த விஞ்ஞானிக்கு இல்லாத களைப்பு அவருக்கு ஏற்படும். அவர்மீது பலருக்கு அனுதாபம் இருப்பதற்குக் காரணம் இதுதான்.

பேச்சிலே புலி என்றால், சுப்பிரமணியத்தைக் குறிப்பிடலாம். புலி கறியைக் கடித்துக் 'கொதறுகிற' மாதிரிக் கொதறுவார்; பிறகு பதறுவார். அப்படியே வார்த்தைகளை உதறுவார். தி. மு. கழகத்தைத் திருச்சியில் படு தாக்குத் தாக்கினாராம் அவர். தீபாவளி அணுகுண்டு மாதிரி வெடித்தாராம். ஜட்கா வண்டிக்குதிரை மாதிரிக் குதித்தாராம். மஞ்சுவிரட்டுக் காளை மாதிரித் துள்ளினாராம். பத்து ஆதரவாளர்கள்கூட முன்னால் உட்கார்ந்திருந்தார்களாம். சொல்லி வைத்தபடியே அவர்கள் 'சபாஷ்' போட்டார்களாம். எழுதிவைத்திருந்தபடியே அவர் பேசி முடித்தாராம். கூட்டம் முடிந்து எழுந்து சென்றபோது மக்கள் ஒரே கேள்விதான் கேட்டார்களாம். அது இது:

"இவரா நமது மந்திரி?"

நமது நிதி இலாகா மிகவும் துர்பாக்கியமானது. ஆண்டிமடத்து உண்டியல்கூட அதைப் பார்த்துப் பரிகசிக்கும். அதன் தலைவர் ராஜாஜியின் திருவிழா ஜால்ராவாம், ஸ்ரீலஸ்ரீ சி. சுப்ரமணியப் பண்டாரம்! இவர்தான் இரண்டாயிரங்கோடி ரூபாய் இந்த நாட்டுக்கு எதற்கு என்று கேட்டவர் என்பதை நினைவில் வைத்துக்கொண்டால், நாம் செய்த ஒரு தவறு நமக்குப் புலப்படும். நாம் மாடு பூட்ட வேண்டிய வண்டியில் எதையோ பூட்டிவிட்டோம். அது வண்டியை இழுக்காமல், 'துணி மூட்டையை எங்கே' என்று கேட்கிறது.

இங்கே செல்வம் பொங்கி வழிகிறதே, இரண்டாயிரம் கோடி எதற்கு?

எல்லோரும் ஆளுக்கு ரெண்டு வேலை பார்த்துக்கொண்டிருக்கிறார்களே இரண்டாயிரம் கோடி எதற்கு?

சோறு வீதியெல்லாம் கொட்டிக் கிடக்கிறதே, இரண்டாயிரம் கோடி எதற்கு?

—சரிதான் நமக்குப் புரிகிறது. நிதி மந்திரி வேலை பார்ப்பதற்கு மூளை எதற்கு?

அங்கே பேசிய இன்னொரு மந்திரி 'எவர் ஸ்டாண்டிங்' பக்தவத்சலம். இவர், 'தி. மு. கழகத்தின் தலைஎழுத்தைத் தேர்தல் நிர்ணயித்துவிடும்' என்றாராம். மக்கள் சரியானவர்களுக்கே ஓட்டுப் போடுவார்கள் என்றாராம். கோலில்லாமல் அளந்து, கத்தியில்லாமல் வெட்டி, கையில்லாமல் கயிறு திரிக்கும் தோழர் பத்து லட்சம், கழகத்தின் தலையெழுத்தை நிர்ணயிக்கத் துடிக்கிறார். (பத்து லட்சம் என்பது 'கல்கி' கொடுத்த பட்டம்! எங்கேயோ, எப்போதோ, பத்து லட்சம் வரை......என்று கேள்வி) பார்ப்போம்! பார்ப்போம். தேர்தல் வரத்தான் போகிறது சீக்கிரம். பக்தவத்சலத்தின் 'டெபாசிட்' தொகை நம் கவனத்தில் இருக்கத்தான் செய்கிறது. அவரைச் சந்திக்கத்தான் போகிறோம். அவர் கைக்கு வந்த கணக்கையும், பைக்குப் போன கணக்கையும் தேதி வாரியாக ஒப்புவிக்கத்தான் போகிறோம். அந்தப் பயம்தான் அவரது காலராவுக்குக் காரணம் என்றால், அந்தோ பரிதாபம்! அவருக்கு நமது அனுதாபம்!

☆

"அழகும், கட்டுமஸ்தான மேனியும் இனிய சுபாவமும் படைத்த எவ்வித இக்கட்டுமில்லாத ஒரு இளம்பெண் தேவை"

—வந்த விளம்பரம்

"அப்படி ஒரு இளம்பெண் இருந்தாள்; அவளைப் பெரியார் ராமசாமி கல்யாணம் செய்துகொண்டுவிட்டார்."

—வராத விளம்பரம்

☆

"கண்ணீர்த்துளிகள் மந்திரிகளாக வந்தால், அவர்களைச் சினிமாக் கொட்டகையில் போய்த்தான் கண்டுபிடிக்க வேண்டும்."

—குருசாமி

"வரும்போது வழக்கம்போல் ஒரு சொம்பில் காப்பி கொண்டு வரவும்."

—அடியேன்

"அண்ணாத்துரைக்கு அரசிய[ல்] என்ன தெரியும்?"

—ஜீவானந்தம் சொன்ன[து]

"எனக்கு 'அண்டர்கிரவுண்டு' முதல் ஆளைத் தீர்த்துக்கட்டும்வரை அனைத்தும் தெரியும்."

—ஜீவானந்தம் சொல்லாதது

★

"பெரியார் மணியம்மையைத் திருமணம் செய்துகொண்டது சிற்றின்பத்துக்காக அல்ல;"

—ஒரு 'திராவிட கழக[ம்]'

"சிட்டுக்குருவி லேகியம் சாப்பிடுங்கள்."

—ஒரு விளம்பரம்

☆

"விடுதலையை வீடுதோறும் வாங்கிப் படிக்கவேண்டும்."

—ஒரு தி. க.

"தலைவலியா! ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்."

—ரேடியோ விளம்பரம்

☆

"சென்னை, சேத்துப்பட்டில் குருசாமி பேசுவார்."

—ஒரு செய்தி

"எச்சரிக்கை! காலரா தடுப்பு ஊசியைப் போட்டுக்கொள்ளுங்கள்."

—சர்க்கார் விளம்பரம்

☆

"தந்தை பெரியார் மட்டும் ஆணையிட்டால் கண்ணீர்த் துளிகளை இருந்த இடம் தெரியாமல் அடித்து விடுவோம்."

—சிவகங்கையில் ஒரு தி. க. பேச்சாளர்

"ஆணையிடுவதற்குப் பெரி[யார்] யாருக்கு என்ன 'ரேட்'டு?"

—ஒரு சந்தேகப் பிராணி

"அறந்தாங்கிக்குப் பெரியாரோடு வந்திருந்த மணியம்மையார் 'முரசொலி', 'தென்றல்' பத்திரிகைகளை வாங்கிக் கிழித்தெறிந்தார். பெரியார் அவற்றை எடுத்துப் பத்திரிகை வியாபாரியிடம் திரும்பக் கொடுத்தார்."

—அறந்தாங்கிக் கடிதம்

"இல்லையென்றால் அம்மையார் அதைத் தின்றிருப்பாரே! வாழ்க நிரந்தரம்! வாழ்க தலைவர்!"

—ஒரு தி. க.

—வணங்காமுடி

திருவல்லிக்கேணி
பாண்டியன் படிப்பக நிதிக்காக
11-11 '56 ஞாயிறு மாலை
6-மணிக்கு சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில்
மாலா, எம். ஏ.
நாடகம் நடைபெறும்.

"வாய்வு சூரணம்"
உஷ்ணவாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்புவாய்வு, பித்தவாய்வு, மலக்கட்டு, மலமந்தம், அஜீரணம், புளியேப்பம், கைகால் அசதி - பிடிப்பு பசியின்மை, செறியாமை, வயிற்றுவலி, பித்தமயக்கம், பித்தசூலை, சோம்பல், முதலான வாய்வு ரோகங்களை அறவே நீக்கி, நல்ல பசி எடுப்பதற்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச் சிறந்த சூரணம். மூலிகைகளினால் தயாரிக்கப் பெற்றது.
ஆண் - பெண் யாவரும் உபயோகிக்கக் கூடியது. (பத்தியமில்லை).
5-பலம் டின் 1-க்கு ரூ. 3-0-0.
சம்பு இண்டஸ்ட்ரீஸ்,
சேலம்-2.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நாடு